

● **ஏன் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் என்று சொல்கிறீர்கள் தமிழர் தேசியத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிற ஈழத்தமிழர்கள் அதனைச் சாதிக்கமாட்டார்களா?**

ஈழத்தமிழர்கள் சாதிக்க மாட்டார்கள் என்பது அல்ல என்னுடைய கூற்று. போராட்டக்களத்தில் உள்ள ஈழத்தமிழர்களுடைய Priorities– முதன்மைகள் வேறு. ஒன்று அவர்கள் போராடவேண்டும் போராட விரும்பாதவர்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ள They have to struggle. அதுவும் ஒருவகைப் போராட்டம்தான். அது மட்டுமல்லாமல் கொழும்புத் தமிழர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள். அவர்கள் தேசியப் போராட்டத்திலே முற்றாகச் சங்கமித்து விட்டார்களா? அன்றேல் அரசாங்கத்தை ஆதரிப்பவர்களா? இல்லை. இரண்டும் கெட்டான் நிலை. அதேபோல கொழும்பிலிருந்துதான் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இந்தப் பத்திரிகைகள் தினக்குரல், தினகரன், வீரகேசரி ஆகிய தினசரிகளின் வார இதழ்கள்தான் முறையான இலக்கியத்திற்கான பிரசுரங்களாக அன்றும் இன்றும் பயன்பட்டு வருகின்றன. இந்தப் பத்திரிகைகளிலே அரசாங்கத்தை எதிர்க்கக்கூடியதாக அல்லது சாடக்கூடியதாக பொருள் அமைந்த சிறுகதைகளோ கவிதைகளோ கட்டுரைகளோ தைரியமாக எழுதக்கூடிய சூழல் உண்டா? எனவே பிரசுரத்திற்கு ஆக்கப்படும் ஆக்கங்கள் ஓர் அளவுக்கு நாட்டின் யதார்த்தங்களைப் பிரதிபலிக்காத படைப்புகளாகத்தான் அமைகின்றன. நாட்டின் யதார்த்தங்களைப் பிரதிபலிக்காத ஒரு படைப்பு என்றால் அந்தப் படைப்பிலே சத்தியம் இல்லாமல் போகின்றது. சத்தியம் இல்லாத இலக்கியப் படைப்புகள் உயிர்வாழ மாட்டாது. ஆனால் பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன் போராளிகளே போராடிக் கொண்டே இலக்கியம் படைக்கிறார்கள் என்று. அந்த இலக்கியங்களிலே ஒன்றிரண்டு கசிந்து எங்கள் வாசிப்புக்குக் கிடைத்திருக்கின்றன. போர்க்களத்தில் நிச்சயமாக வலிமைமிக்க இலக்கியப் படைப்புகள் உருவாகும். உருவாகியிருக்கலாம் அவற்றைப் பிரசித்துவப் படுத்துவதற்கான காலக்கூறு இன்னும் வந்து சேரவில்லை. எவ்வளவு காலத்திற்கும் அந்தப் படைப்புகளுக்காக நாங்கள் காத்திருக்க வேண்டுமோ அதுவும் எங்களுக்குத் தெரியாது.

பிள்ளைத்தாய்ச்சிதான்– ஆணா பெண்ணா என்பதை அறியாமல் அதற்கு நாங்கள் பெயர் சூடுவது போல இருக்கும் வன்னி இலக்கியத்தின் பெருமைகளைப்பற்றி அல்லது அவை சாதிக்கும் என்று எதிர்வு கூறுவது. இந்நிலையிலேதான், புலம்பெயர்ந்த நாடுகளிலே எங்களுடைய மண்ணின் மைந்தர்கள் பேசிய மொழியில் அமையும், நனைவிடைதோய்தலில் அமைந்த தமிழில் எழுந்த இலக்கியங்களைப் படைக்கும்பொழுது, நாங்கள் அவற்றை நாற்றாக வளர்த்து மீண்டும் சமாதானம் வரக்கூடிய இலங்கையிலே கொண்டுசென்று பதியம் வைக்கும்பொழுது தொடந்தேர்ச்சியான ஓர் இலக்கிய மரபை நாங்கள் பேணியவர்களாக இருப்போம். ஓர் அவாந்திரத்திலிருந்து ஒரு யுத்தகளத்தின் கெந்தக நெடியிலிருந்து செழிப்பான ஆரோக்கியமான செடிகள் வளருமா என்பது ஒரு கேள்வி. புலம் பெயர்ந்த நாடுகளிலே இருக்கக்கூடிய தமிழர்கள் எவற்றை இழந்த போதிலும் சில சம்பாதிப்புகளும் அவர்களுக்கு உண்டு. இந்த வளங்களை மீள் உயிர்ப்புப் பெறும் தமிழ் ஈழத்தை கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்துவார்கள் என்பதற்கு எவ்வளவு உறுதியோ அவ்வாறுதான் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ் மீது கொண்டுள்ள பற்றார்வத்தினால் இயற்றும் புதிய இலக்கியங்கள் ஈழத்து இலக்கிய வளத்திற்கு எதிர்காலத்தில் வளம் சேர்க்கக் கூடிய முயற்சியாகவும் இருக்கவேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளிலே இலக்கிய முயற்சிகளிலே ஈடுபடுபவர்கள் ஒரு சமூக அங்கீகாரம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டும் ஈடுபடாமல் இந்தப் புனித நோக்கமும் எங்களுக்கு இருக்கிறது என்பதை மறக்காது இலக்கிய ஊழியத்தில் ஈடுபட வேண்டும். மற்றவர்கள் எப்படியோ நான் அந்தச் சிந்தையாகத்தான் என்னுடைய இலக்கிய ஊழியத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறேன்.



**● உங்களுடைய பதில் கொழும்பையும் வன்னிப்பகுதியையும் கருத்தில் கொண்டு சொல்வதாகத் தெரிகிறது. மற்றைய தமிழ் பேசும் பகுதிகளில் நடைபெறும் தமிழ் முயற்சிகளை நீங்கள் கருத்தில் கொள்ளாதது போல் தோன்றுகிறதே.**

அது அல்ல. என் மீது தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டாலும் பாதகம் இல்லை. பல சந்தர்ப்பங்களிலேயும் நான் உரக்கச் சொல்லி விட்டேன். உண்மைகளை அஞ்சாது சொல்லிவருபவன் நான். தமிழ் ஊழியத்தைப் பொறுத்தவரையில் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். விபுலானந்த அடிகளுக்கு மகிமை செய்யக் கூடியவகையில் மீன்பாடும் தேன்நாட்டுத் தமிழ் படைப்பு முயற்சிகள் அமையவில்லை என்பது என்னுடைய ஆதங்கம். இன்றும் கல்கியும், நா. பார்த்தசாரதியும் இலக்கியக் கொடுமுடிகள் என்று வாயூறும் தமிழ் எழுத்தாளர்கள் மட்டக்களப்பு மண்ணிலேதான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஆதர்சமாக கல்கி, ஆனந்த விகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளே அமைந்துள்ளன. இன்றுகூடத் தமிழ்நாட்டில் ஈழத் தமிழ் வல்லபங்களை விதையடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய மணிமேகலைப் பதிப்பகங்கள் போன்றவற்றிற்கு Exhibition நடத்தக்கூடிய அளவுக்குத்தான் அவர்களுடைய தமிழ் அபிமானமும் தமிழ் மதிப்பீடுகளும் இருக்கின்றன போல் எனக்கு தோன்றுகிறது. கல்கி நடத்திய சிறுகதை போட்டியில் முதற் பரிசு பெற்றவர் நவம். அதிலே சிறப்புப் பரிசு பெற்றவர் அன்புமணி. இவ்வாறு பல எழுத்தாளர்கள் பல காலமாக மட்டக்களப்பிலே சிறுகதைத் துறையிலும் ஏனைய துறைகளிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆனால் நீலாவணன் என்ற கவிஞன் போன்று இன்று வரையில் தற்கால இலக்கியத்திற்குத் தனித்துவம் சேர்த்த வேறு ஒரு படைப்பாளியை நான் மட்டக்களப்பு மண்ணிலே காணமுடியாது இருக்கிறது. எழுவான்கரையில் வாழக்கூடிய தமிழர்கள் ஓரளவுக்கு முஸ்லிம் மக்களுடைய இருத்தலினாலும் அவர்களுடைய கிராமங்கள் இருப்பதினாலும் முற்றாகப் போர்க்களமாக மாறாமல் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்கும் ஒரு சூழ்நிலையில் வாழ்கிறார்கள். அத்தகையவர்கள் நிச்சயமாகத் தமிழ் இலக்கியத்தை அதன் உயிர்ப்பு வடிவங்களிலே கொண்டுவர வேண்டிய பாரிய கடமை உள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தகைய கடமை உணர்வுகளுடன் செயல்பட்டு தங்களை பிரேரித்துக் கொண்டதான ஆக்கங்கள் எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை. கிழக்குப் பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகளிலே கூட நான் விமர்சனம் வைப்பதற்குப் பிரதான காரணம் இன்றும் நாட்டார்பாடலும் நாட்டுக்கூத்தும் என்று அரைத்த மாவையே அரைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, விபுலானந்தர் தொடக்கம் இல்லை அவருக்கு முன்னர் இருந்தே ஏற்பட்ட வித்துவ உலகத்தினுடைய தரிசனங்களை ஆய்வுகள் மூலம் கொண்டுவந்து நிறுத்துவதற்கு அவர்கள் பாடுபடுவதே இல்லை. புதிய இலக்கிய வடிவங்களிலே உள்ள Exposure அதை அறிந்துகொண்டு அதைப் பயிலும் ஒரு பண்பும் இன்றும் மட்டக்களப்புப் படைப்பாளிகளுக்கு வரவில்லை. இதை நான் சொல்லுவதற்கு ஒரு காரணம் அவர்களைக் குற்றம் சுமத்துவதற்காக அல்ல. இராஜதுரை, எஸ். டி. சிவநாயகம் போன்ற மூத்த தலைமுறையினர்கள் அவர்கள் மீது திணித்துள்ள ஒரு பார்வையிலிருந்து விடுபட்டு புதிய யதார்த்தங்களை உள்வாங்கி அந்த யதார்த்தத்திற்கு உண்மையானவர்களாக இவர்கள் வாழ்ந்து இலக்கியத்தை முன்னெடுத்தல் வேண்டும். அந்த முன்னெடுத்தல் நடைபெறவில்லை என்ற தாக்கத்தினாலும், இன்றும் என்னுடைய பிள்ளைகள் அனைவரும் தங்களை மட்டக்களப்பு மைந்தர்கள் என்று மட்டுமே அடையாளப்படுத்துவதினாலும், அந்த மண்ணிலே தான் நான் என்னுடைய இலக்கிய ஆளுமைகளின் பெரும்பகுதியைப் பெற்றேன் என்ற நன்றியறிதலினாலும் இவற்றைச் சொல்லுகிறேன். இந்த நிலையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் இத்தகைய நிர்ப்பந்தகளுக்கு உட்படாமல் தேசிய நீரோட்டத்தில் அரசியலில் கலந்துள்ளது போல, தேசியப் பத்திரிகைகளிலே தங்களுடைய ஆக்கங்களைப் பிரசுரிக்கக் கூடியதாக இருக்கிறது. இன்றைய காலங்களிலே கடந்த ஒரு இருபது ஆண்டுகளாக வெளிவந்த கொழும்புப் பத்திரிகைகளை நீங்கள் எடுத்துப் பார்த்தீர்களானால் கவிதைகளோ கதைகளோ அதிகமாக முஸ்லிம் எழுத்தாளர்களுடைய

படைப்புகளாகவேதான் இருக்கின்றன. முஸ்லிம் படைப்பாளிகள் பலர் சிறந்த படைப்பாளிகள். இன்றும் கிழக்கு மாகாணத்தின் சிறுகதை இலக்கியத்தை அதன் உச்சங்களுக்குக் கொண்டு போன இரண்டு எழுத்தாளர்களை இனங்கண்டு எடுப்பதானால் ஒன்று பித்தன் என்ற பெயரில் எழுதிய ஷா. மற்றது மக்கத்துச் சால்வை ஆசிரியர் எஸ். எல். எம். ஹனிபா. இவர்களைத் தவிர வை. அகமது ஏன் எம். ஏ. நுஃமான், பாணந்துறை மொஹின்சமீம் போன்ற பல முஸ்லிம் படைப்பாளிகள் தங்களுடைய ஆழுமைகளைப் பதித்திருக்கிறார்கள். ஆனால் அதைவிடுத்து இந்த இடைநிரப்புவதற்காக தங்களை எழுத்தாளர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள், இந்த விலாசம் தொலைத்து விட்ட முற்போக்கு எழுத்தாளர்களினால் பயன்படுத்தப்பட்டும் ஏனைய வகையிலேயும் தங்களைப் படைப்பாளிகளாக பிரசித்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய படைப்புகளிலே உண்மையில், அவ்வப்போது கிடைக்கும் பத்திரிகைகளிலே பார்க்கும்பொழுது எதுவும் தேறும் என்பது போலத் தோன்றவில்லை. இந்த அபத்தங்கள் இந்த மயக்கங்கள் இருப்பதினால், புலம் பெயர்ந்த தமிழர்களுடைய பங்களிப்பும் ஊழியமும் முக்கியமாகின்றது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் புத்தாயிரத்தில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழப்படைப்பாளிகளே தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள் என்று நான் அறிக்கையிட்டு வருகிறேன்.



**● கனக செந்திநாதன் எழுதிய 'ஈழத்து இலக்கியவளர்ச்சி' என்ற நூலில் நீங்களும் சில கருத்துக்களைப் புகுத்தியிருப்பதாகப் பரவலாகக் கூறப்படுகிறது. உங்களுடைய விளக்கம் என்ன?**

முதன் முதலில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து பரபரப்பு ஏற்படுத்தியவர் சில்லையூர் செல்வராசன். பின்னர் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில் மு. தளையசிங்கமும், அந்த நூலிலே நான் கைவைத்துப் பிழைபடுத்திவிட்டதாகக் குற்றஞ்சாட்டி எழுதியிருந்தார். அந்தக் காலத்திலே கனக செந்திநாதன் அதற்குப் பெரிதாக மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவர் மறுப்புத் தெரிவிக்காததற்குப் பிரதான காரணம் அந்த நூல் வெளிவந்த பிறகு அவர் முழுமூச்சுடன் ஓர் இலக்கியவாதியாகச் செயற்பட முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருந்தார். அந்த மௌனத்தைச் சாதகமாக வைத்துக்கொண்டு மௌனம் சம்மதம் என்பதுபோல் நான் அந்த வரலாற்றைக் கசக்கிவிட்டேன் என்ற அவர்களுடைய கூற்றை ஏற்றுக்கொண்டது போன்ற ஒரு நிலை உண்டாயிற்று. ஈழத்து இலக்கிய முயற்சிகளின்– தற்கால இலக்கியப்படைப்பு முயற்சிகளின் உத்தியோக பூர்வமான முதலாவது உண்மையான வரலாற்று ஆவணம், 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் வரலாற்று நூல். கனக செந்திநாதனை முதலில் நான் சந்தித்த பொழுது எனக்கு எற்பட்ட பிரமிப்பு என்னவென்றால், அவர் ஒரு யுக சங்கமத்தின் தலைவனாகத் திகழ்ந்தார். பழைய பண்டிதவர்க்கத்தினரதும் படித்த இலக்கியச் சுவைஞர்களினதும் பரம்பரையாக வந்து, புதிய இலக்கியமாற்றங்களை வரவேற்கக்கூடிய ஒரு படைப்பாளியாக கனக செந்திநாதன் வாழ்ந்துகொண்டிருந்தார். அது மட்டுமன்றி தமிழ் ஆசிரியரான அவர், மிகச்சிறந்த படைப்புகள் அனைத்தையும் வருத்தம் கருதாது ஒட்டுப்புத்தகங்களாகத் தயாரித்து அவற்றையே அவர் ஒரு நூல் நிலையம்போல வைத்திருந்து இவற்றைச் சாதித்தார். இந்தச் சாதனையை இலங்கை இலக்கிய வரலாற்றில் வேறு யாருமே சாதித்ததில்லை. இந்தச் சாதனையை அவர் செய்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது இரண்டு விஷயங்கள் என நான் நம்புகிறேன். ஒன்று பண்டிதமணியின் பரம்பரையில் அவர் ஒரு கல்விமானாகவும் ஆசிரியராகவும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது. இரண்டாவதாக யாழ்ப்பாண மண்ணில் பண்டைய தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை மட்டுமன்றிப் புதிய அரசியல் மாற்றங்களையும் பிரசித்தப்படுத்துவதற்காகத் தொடக்கப்பட்ட ஈழகேசரிப் பத்திரிகையை நடத்திய பொன்னையா பிறந்த குரும்பசிட்டியிலே வாழ்ந்தது. இவற்றின் காரணமாகத்தான் இந்தத் தற்கால இலக்கிய வரலாற்றை எழுதக்கூடிய ஒரு மாமுனி கனக செந்திநாதன்தான் என்பதை அறிந்து, கைலாசபதி ஊக்குவித்து ஈழத்து

இலக்கிய வளர்ச்சி என்ற தொடர் தினகரனில் வந்தது. இந்தத் தினகரனில் வந்த கட்டுரைகளை வாசித்தபொழுது ஏற்பட்ட அருட்டுணார்வினாலேதான் மட்டக்களப்பில் நடந்த தமிழ்விழாவில் ஓர் அரங்கிற்குத் தலைமைதாங்க கனக செந்திநாதனை அழைத்தபொழுது, இலங்கையின் தற்கால இலக்கிய வரலாறு ஒன்றினை ஆதார பூர்வமாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். என்னுடைய ஆசையின் பிரகடனத்தையும் அவர் தன்னுடைய நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். நான் அந்த வேண்டுகோளை விடுத்த பிற்பாடு பல சந்தர்ப்பங்களிலும் கனக செந்திநாதனுடன் பேசியிருக்கிறேன்.

தான் எழுதி தினகரனில் வெளிவந்த கட்டுரைகள் அப்படியே நூல்வடிவமாகப் பிரசுரமாகக் கூடியதாக இருக்கும்பொழுது ஏன் ஆதாரபூர்வமாக எழுதும்படி கேட்டிருந்தீர் என என்னிடம் கேட்டிருந்தார். அப்பொழுது, தகவல்களை மட்டுமன்றி அக்காலத்தில் நடந்த முயற்சிகளை விமர்சனரீதியாக மதிப்பீடு செய்யும் ஒரு கூறு உங்களுடைய நூலிலே இல்லாமல் இருக்கிறது என்று நான் நேர்மையாகவே சுட்டிக்காட்டினேன். எனவே அவர் அதை ஏற்றுக்கொண்டு, அந்தக் கூறையும் இணைத்து மீழ எழுதியதுதான் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி.' எனது இனிய நண்பர் ஏ. ஜே. கனகரட்னாவுடன் நான் பகிர்ந்த இலக்கிய வேளைகள் இனிமையானவை. மிகப் பயனுள்ளவை. அவர் ஒரு முறை கூறினார், "எனக்கு எப்பொழுதும் விமர்சனத்துறையில் பிரமிப்புத் தருபவர் கனக செந்திநாதன். ஒரு தமிழ் ஆசிரியராகவும் யாழ்ப்பாண வித்துவ பரம்பரையினால் உருவாக்கப்பட்ட இலக்கிய இரசிகனாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் கனக செந்திநாதனால்– ஆங்கிலம் அதிகம் தெரியாத கனக செந்திநாதனால், ஆங்கில விமர்சகர்கள் விதித்துள்ள விமர்சன அலகுக் கணியங்களையும் விமர்சன இலக்குகளையும் உள்வாங்கியவராக இலக்கிய விமர்சனத்தைச் செய்து வருதல் வியப்பினை அளிக்கிறது" என்று சொன்னார். இதிலிருந்து கனக செந்திநாதன் எவ்வகையிலும் என்னுடைய ஆதரவோ உதவியோ எதுவுமின்றி அந்த நூலை எழுதக் கூடியதாக தக்காராகவே இருந்தார். அவர் தினகரனில் வந்த தொடரிலே தகவல்களை வைத்தார். அதனை ஆதாரமாக வைத்து சில விமர்சனங்களையும் மேற்கொண்டு திருத்தி அமைத்த கட்டுரைகள்தான் நூலாக வெளிவந்தது. நூலாக வெளிவந்தபொழுது செய்த விமர்சனங்கள் சில என்னுடைய விமர்சனப்போக்குடன் ஒத்து இருந்ததினால் அதை நான் எழுதிக் கொடுத்ததாக சுலபமாக முற்போக்கு இலக்கிய வாதிகளினால் சொல்லக்கூடியதாக இருந்தது. ஒன்றை நீங்கள் அறியவேண்டும் அந்தக் காலத்தில், 61–62ஆம் ஆண்டுகளிலே வீரகேசரி இலக்கிய சர்ச்சை என்று ஒரு பகுதியை மிக ஆழமான விஷயங்கள் கொண்டதாக ஊக்குவித்து இலக்கிய விமர்சனத்திலே ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. கைலாசபதியினால் செய்யமுடியாத ஒரு செயலை வீரகேசரி வார இதழ் அந்த இலக்கிய சர்ச்சை மூலம் செய்தது என்பது பதிவுக்கு உரியது. அந்த இலக்கிய சர்ச்சைகளிலே கனக செந்திநாதன் எழுதிய கட்டுரைகளை எதிர்த்து அவருடைய மதிப்பீடுகள் தவறு என்று சொல்லி மூன்று வாரங்கள் தொடர்ந்து நான் மறுப்புக் கட்டுரை எழுதினேன். இன்றும் வீரகேசரியில் நீங்கள் பார்க்கலாம். கனக செந்திநாதனுக்கும் எனக்கும் ஆரோக்கியமான நட்பு இருந்தது. இந்த நட்பு வேறுபாடுகளின் மத்தியிலேயும் இலக்கிய நயங்களை ஒன்றாக இருந்து சுவைக்க முடியும் என்கிற ஓர் ஆரோக்கியமான சிந்தனையுடைய ஆரம்பம் என்றோ அல்லாவிட்டால் ஒரு திருட்டாந்தம் என்றோ இதனைச் சொல்லலாம். எனவே, மேலெழுந்த வாரியாகப் பொன்னுத்துரை எழுதிக்கொடுத்தார் என்பதிலும் பார்க்க தினகரனில் ஆரம்பத்தில் கனக செந்திநாதன் எழுதிய ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய குறிப்புகளிலிருந்து எந்த அளவுக்கு அவருடைய நூல் மாறுபட்டது எந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்கள் தான் அங்கே துருத்திக் கொண்டு நின்றன என்பதை ஆய்வு செய்து ஆவணப்படுத்தி தீர்ப்புக் கூறவேண்டும். அதனை விடுத்துக் கேள்விச்செவியன்களாக சந்ததி சந்ததியாக அவர்எழுதிக் கொடுத்தார் என்று கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பது உண்மையாக ஈழத்து படிப்பு உலகத்தின் ஓர் அவப்பெயரைக் கொண்டுவரும் செயலாகும் என்று நான் கூறுகிறேன்.

❑

# மதகலாசார தடைகளை முறியடித்து பெண்விடுதலை காண வேண்டும்

## (பெண்ணியம் – விவாத அரங்கு சந்திரகாந்தா முருகானந்தனின் கட்டுரை தொடர்பாக)

*- கோமளா*

ஞானம் இதழ் 65 பற்றிய விமர்சனம் தினகரன் பத்திரிகையில் படிக்கக் கிடைத்த பின்னரே ஞானம் இதழ் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. சந்திரகாந்தாவின் பெண்ணியம் தொடர்பான படைப்புபற்றி விமர்சகர் விரிவாகக் குறிப்பிட்டிருந்ததால் அக்கட்டுரையை ஆழமாக வாசித்த போது விமர்சகரின் கூற்றுப்படி, இது நல்லதொரு கட்டுரை. 'இது தொடர்பான ஒரு விவாதத்தை ஞானத்தில் நடத்தலாமே' என்ற எண்ணம் எனக்கும் தோன்றியது.

அண்மைக் காலமாக பெண்ணிய எழுத்துக்கள் மூலம் எமது நாட்டில் உரத்த சிந்தனைகளை விதைத்துள்ள சந்திரகாந்தாவின் பல கட்டுரைகள் கருத்தாடல்களுக்கான கருத்தை திறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான எதிர்வினை அல்லது அனுசரணையான கட்டுரைகள் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. தனக்குத் தெரிந்தவற்றை, தனக்குச் சரி என்றுபடுபவற்றை உறுதியாகக் கூறும் திறனும், துணிவும் இப் பெண்ணியவாதியின் சிறப்பம்சங்களாக இனம் கண்டுள்ளேன். இன்றைய உலக சமூகக் கட்டமைப்பில் ஆணாதிக்கத்தை இலகுவில் உடைப்பது என்பது அசாத்தியமாகவே பட்டாலும், அதை எப்படியும் சாத்தியமாக்கிவிட வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டு துணிச்சலோடு எழுதிவரும் சகோதரி பாராட்டுக்குரியவர்.

எழுத்தாளரின் சில கருத்துக்கள் எனக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும், பல கருத்துக்கள் உடன்பாடாகவும் இருக்கின்றன. ஆணாதிக்க சமூக கட்டமைப்பின் தடைகளைச் சாக்குப் போக்காகச் சொல்லாமல் உறுதியுடன் பெண்கள் செயல்படவேண்டும் எனக் கூறியவர், பெண் விடுதலையின் ஓர் அம்சத்தின் முன்னுதாரணமாய் பெண் போராளிகள் இருப்பதாகக் கூறியுள்ளார். விமர்சகர் சத்யா தினகரனில் குறிப்பிட்டுள்ளது போல பெண் போராளிகளும் ஆணாதிக்க கட்டமைப்பின் கீழ்த்தான் போராட வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

கல்வியும், பதவியும் கூட பெண்ணுக்கு விடுதலையை பெற்றுத்தரத் தவறிவிட்டதாகக் கூறும் சந்திரகாந்தாவின் கூற்றுக்கள் எவ்வளவு தூரம் யதார்த்தமானதோ, அவ்வளவு தூரம் பெண்கள் போராளிகளாகிவிட்டதனால் மட்டும் அவர்கள் விடுதலை பெற்றுவிடவில்லை என்பதும் உண்மையே : போராயுதங்களைச் சுமந்து வீட்டிற்கு வெளியே வந்த பெண்களின் துணிச்சல் பெண்விடுதலையின் ஓர் சிறப்பம்சமே எனினும், இது விடுதலையின் குறியீடாகக் கருதிவிட முடியாது. இராணுவ, போலீஸ் கட்டமைப்பில் உள்ளது போலவே போராளிகளிலும் ஆணாதிக்கம் மேலோங்கியே இருக்கிறது. தாமாக முடிவெடுக்கும் சுதந்திரம் பெண்களுக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

மதமும், கலாச்சாரமும் பெண்களின் விடுதலைக்கு முட்டுக்கட்டையிடுவதாக ஆசிரியர் குறிப்பிடுவது முற்றிலும் உண்மையே. இவற்றை எல்லாம் உடைத்துக் கொண்டு பெண் வெளியேற வேண்டும் என்ற பெண்ணியவாதிகள் கூறுகின்றார்கள். எனினும் அதற்கான மார்க்கம் தான் இன்னும் வெளிச்சம் போட்டுக் காட்ட முடியாததாக இருக்கிறது. இன்றைய நாகரீக சமுதாயத்தில் குடும்பம் என்ற அலகை மறுப்பதோ, மதத்தை நிராகரிப்பதோ கூட சாத்தியமான விடயம் என்று படவில்லை. எனினும் அசாத்திய மென்றிருப்பவற்றைக் கூட சாத்தியமாக நினைக்கும் மாலதி மைத்திரேயி போன்ற வீச்சு சந்திரகாந்தாவின் எழுத்திலும்

தெரிகிறது. இன்னொரு சிறப்பம்சமாக கட்டுரைகள் இலகுவாக எல்லாத் தரப்பினாலும் வாசிக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இன்னும் கூட இலகுவாகப்படலாம் உண்மையாக விழிப்படைய வேண்டியவர்களை கட்டுரைகள் எட்ட வேண்டும் என்பது முக்கியமல்லவா?

பெண் விடுதலையும் சமத்துவமும் என்ற சந்திரகாந்தா முருகானந்தனின் நூலையும் படிக்கக் கிடைத்தது. கட்டுரையாளர் பரந்து பட்டுச் சிந்திப்பது தெரிகிறது. வேதநாயகம் பிள்ளை, பாரதி, ஈ. வே. ரா பெரியார் முதலியோர் மூட்டிய பெண் கல்வி இன்று விளாசி எரிவது, தமிழ்ப் பெண்களும் தம் உரிமைகளுக்காகப் போராடுவதை சாத்தியமாக்கியுள்ளது. மத கலாசார கட்டமைப்புக்களை உடைத்துக் கொண்டு பெண் வீறு கொண்டு எழ வேண்டும் என்ற ஆசிரியரின் ஆதங்கம் நிஜமாகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

❑

---

# எங்கள் வளாகம்

ரா. நித்தியானந்தன்.

துரோணரைப்
போன்ற துரோகிகள் இங்கு...
ஏகலைவனைப் போல
நாங்கள் இன்று
விரல்களை இழந்தோம்.
அசுவத்தாமர்கள்
எல்லாம்
இங்கு
அர்ச்சுனர்களாக்கப்பட்டனர்.
தேவதாசிகள்
சாவித்திரிகள் ஆக்கப்பட்டனர்.
திரௌபதியை கூடப்போலல்லாமல்
துகிலிழக்க காத்திருந்தவர்களுக்கு
சீதைப்பட்டம்.
உண்மை சீதைகள்
இங்கு
வெளிக்களச் சிறைகளில்.

ஓ!
ஆண்கள்
இங்கு
வண்டி பூட்டிய
மாடுகள்.

எல்லா
கழுதைகளும்
வண்டி இழுத்தன.
வயல்களை
உழுதன.
பெரிய கழுதைகளின்
“நோட்சை” சுமந்தன.

இறுதியில்
எங்கள் வளாகம்
சேறாக்கப்பட்டது.
நாடு காடாக்கப்பட்டது.

மந்தைகள்
பெருகின
அரசாட்சியே-
இந்த
மந்தைகளிடம் தான்.

# "மலர்" நினைவுகள் (அன்புமணி)

[சிறு சஞ்சிகைகள் வெளியிடுவது என்பது பகீரதப் பிரயத்தன முயற்சி. இங்கு முதுபெரும் எழுத்தாளர் அண்புமணி தனது சஞ்சிகை அனுபவங்களை தருகிறார் – *ஆசிரியர்*]

## 1. முன்னுரை:

சஞ்சிகை வெளியீடுகளைப் பற்றி நினைக்கும் போது "ஆயிரம் மலர்கள் மலரட்டும்" என்ற வாசகமே நினைவுக்கு வருகிறது. மலர்களைப் போன்றே சஞ்சிகைகளும் வாசகர்ளுக்கு அர்ப்பணமாகித் தம் வாழ்வை முடித்துக் கொள்கின்றன. (சில அற்பாயுளில்)

சஞ்சிகைகளின் பண்பும் பயனும் அது என்பதால், இடையில் நின்று போகும் இதழ்களை ஏளனக் கண்கொண்டு நோக்குவது அர்த்தமற்றது.

நின்றுபோன இதழ்களைப் பற்றி நினைவு கூர்வது யாருக்கு என்ன பயன்? பயன் நிறைய உள்ளது வாசர்களுக்கும்–புதிய சஞ்சிகைகளை ஆரம்பிப்பவர்களுக்கும் இதனால் நிறையப் பயன் உண்டு.

குறிப்பாக ஏனோதானோ மனப்பான்மையுடன் இயங்கும் மக்களுக்கு அவர்களது மனச்சாட்சியை உலுப்பிவிடும் மகத்தான பயன் இதனால் ஏற்படலாம்.

அந்த வகையில் "தீபம்" சஞ்சிகையில் வல்லிக்கண்ணன் எழுதிய " மணிக்கொடி காலம்" "சரஸ்வதி காலம்" "எழுத்து" "நடை" முதலிய சஞ்சிகைகள் பற்றிய தொடர்கட்டுரைகள் நினைவு கூரத்தக்கன. " மணிக்கொடி" சீனிவாசன், பி. எஸ். ராமையா, வ .ரா. முதலியோர் பட்ட துன்பங்கள் நம் நெஞ்சைத் தொடுகின்றன. அந்த உழைப்பு அவர்களது சொந்த வாழ்க்கைக்குப் பயன்படாமல், இலக்கிய உலகுக்குப் பயன்பட்டதே என்ற எண்ணம் நமது வாசகர்களுக்கு ஏற்படவேண்டும். அதன் மூலம் புதிதாகத் தோன்றும் சஞ்சிகைகளுக்கு அவர்களது முழு ஆதரவு கிடைக்கவேண்டும்.

## 2. மறைந்து போன ஈழத்து இலக்கியச் சிற்றேடுகள் சில:

இலக்கியச் சிற்றேடுகளின் கதி தமிழகத்திலும், ஈழத்திலும் ஒரேமாதிரியாகத்தான் உள்ளது. தமிழகத்தின் பிரபல இலக்கிய ஏடுகளான "கண்ணதாசன்" (ஆசிரியர்: (கண்ணதாசன்) "தீபம்" (நா. பார்த்தசாரதி) ஞானரதம் (ஜெயகாந்தன்) கங்கை (பகீரதன்) முதலியன இடையில் நின்று போயின (பல ஜனரஞ்சக ஏடுகளும் அவ்வாறு நின்று போயின

அவ்வாறே ஈழத்திலும் "மரகதம்" (இளங்கீரன்) அஞ்சலி (செல்வராசா) கலசம் (செழியன்) கற்பகம், தமிழமுது, தீர்த்தக்கரை, அலை, (யேசுராசா) முதலியன அவசர அவசரமாகத் தோன்றி அற்பாயுளில் மடிந்து போயின

அவ்வாறே யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் முதலிய பிரதேசங்களிலும் அவ்வப்போது தோன்றிய இலக்கியச் சிற்றேடுகள் இடையில் நின்று போயின.

மட்டக்களப்பில் "பாவை" (அ. ஸ. அப்துஸ் ஸமது) "பாடும்மீன் (நிலாவணன்) கவிஞன் (எம். ஏ. நுஃமான்) காலரதம் (உமா வரதராஜன்) "பாரதி" முதலிய இலக்கியச் சிற்றேடுகள் அவ்வப்போது தோன்றி மறைந்தன. "மலர்" 1970ல் தோன்றி 1971 ல் மறைந்தது. மலருக்குப் பின்னும் சில இலக்கிய ஏடுகள், மட்டக்களப்பில் தோன்றி மறைந்தன. "சுமைதாங்கி" (ரீ. பாக்கியநாயகம்) தாரகை (கண.மகேஸ்வரன்) பூவரசு (சாருமதி) முதலியனவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம். தொண்டன் கிறீஸ்தவ இலக்கிய ஏடு நீண்டகாலம் தொடர்ந்து வெளிவருகிறது "போது" (வாகரை வாணன்) அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து வெளிருகிறது. இந்தப்பின்னணியில் "மலர்" பற்றி நோக்குவோம்.

## 3. மலர்:

1970ம் ஆண்டு மிகச் சிறப்பான முறையில் வெளிவந்த இலக்கிய மாத ஏடு "மலர்" அன்றும் இன்றும் ஈழத்துச் சஞ்சிகைகள் பற்றிப் பேசப்படும் போது தவறாது குறிப்பிடப்படும் பெயர் "மலர்". 1970 ஜனவரி முதல் "மலர்" வெளிவந்தது 1970 ஜனவரி முதல் 1971 டிசம்பர்வரை இதழ்கள் வெளிவந்தபின் சமாதி அடைந்தது.

1970ல் இச்சஞ்சிகை வெளிவந்தாலும் அதற்குப் பத்துவருடங்கள் முன்பிருந்தே, (அதாவது 1960களில்) சஞ்சிகை ஒன்றை வெளியிடும் எண்ணம் மனதில் முளைவிட்டுப், பாடாய்ப்படுத்தியது.

1961ல் உருவான எழுத்தாளர் சங்கம் மிகக்காத்திரமான இலக்கியப் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தது. நான் அதன் செயலாளராகத் தொடர்ந்து பல வருடங்கள் பணியாற்றினேன்.

இலக்கிய சஞ்சிகை ஒன்றை வெளியிடப்பட வேண்டும் என்ற திட்டத்தை முன்வைத்த போதெல்லாம் பழைய பாடங்களை நினைவில் கொண்டு சங்கம் அதில் அக்கறைக் காட்ட வில்லை.

ஆனாலும் எப்படியாவது ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையை வெளியிடவேண்டுமென்ற தணியாத ஆர்வம்–தாபம், நீறுபூத்த நெருப்பாக என் நெஞ்சில் கனன்று கொண்டேயிருந்தது.

## 4. எண்ணக்கரு:

தமிழகத்திலிருந்து வெளிவந்த பல சஞ்சிகைகளின் வடிவமைப்பை என்மனதில் இரைமீட்டபின் இதைவிட வித்தியாசமாக நாம் வெளியிடும் சஞ்சிகை அமைய வேண்டும் என எண்ணுவேன்.

அக்காலகட்டத்தில் நா. பார்த்தசாரதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "தீபம்" என்னை மிகவும் கவர்ந்தது. அந்த வடிவமைப்பிலேயே நமது சஞ்சிகை வெளிவர வேண்டும் என்ற எண்ணம் உறுதியாகி விட்டது

தனியே வெளியிடும் அளவு பொருளாதார வசதி இல்லை. எனவே 'பசை' உள்ள சிலரைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என எண்ணினேன். பகீரதமுயற்சிகளை மேற்கொண்டேன். 'சஞ்சிகை வெளியிடுவது' என்ற வார்த்தையைக் கேட்டதுமே அவர்கள் முகம் சுருங்கிவிடும். சிலர் 'ஏனப்பா இந்தத் தொல்லை' என்ற ரீதியில் ஆலோசனை கூறுவார்கள். ஏற்கனவே பலர் சஞ்சிகை வெளியிட்டுக் கையைச் சுட்டுக் கொண்ட கதைகளைக் கூறுவார்கள். "ஆனானப் பட்ட இளங்கீரனின் "மரகதமே" நிலைக்க முடியவில்லை நாமெல்லாம் எந்த மூலைக்கு" என்ற ரீதியில் பேசுவார்கள்.

இவற்றையெல்லாம் நான் ஒரு சவாலாகவே எடுத்துக்கொண்டேன். எப்படியாவது இவர்கள் மெச்சும்படியாக ஒரு சஞ்சிகையை வெளியிட்டு இவர்கள் முகத்தில் கரி பூசவேண்டும் என எண்ணுவேன்.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப*
*எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்"* (666)

## 5. மலர்க்குழு:

எப்படியோ 'மலர்' சஞ்சிகை வெளியிடுவதற்கு ஒரு குழுவை உருவாக்கிவிட்டேன். அவர்கள் அனைவரும் என்னோடு மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பணிபுரிந்தவர்கள். என்னுடைய 'ஆக்கினை' பொறுக்க முடியாமல் அல்லது என்னுடைய முகத்தை முறித்துக் கொள்ள முடியாமல் பணம் முதலீடு செய்ய முன்வந்தனர். அவர்கள் பெயரை இங்கு நான் கட்டாயமாகக் குறிப்பிடவேண்டும். அவர்கள்:–

1. ஜனாப்.எம்.எஸ்.எம். ஹுசையின்– சித்திரக் கல்வி அதிகாரி (அளுத்கம).
2. எஸ். சேதுகாவலர், இலிகிதர் (நயீனாதீவு).
3. க. கணபதிப்பிள்ளை, இலிகிதர் (குருக்கள் மடம்).
4. என். விவேகானந்தன் (SISW) யாழ்ப்பாணம்.
5. இரா. நாகலிங்கம் (அன்புமணி) – ஆரயம்பதி

(இதில் குறிப்பிட்ட முதல் மூவரும் இப்போது இல்லை) ஒவ்வொருவரும் ரூ. 500/= கொடுத்தனர் (1970ல்) (இப்போது இத் தொகை ரூ. 50.000/=க்குச் சமமாகும்) இப்பணம் நிச்சயமாகத் திரும்பி வராது என்று தெரிந்து கொண்டே இப்பணத்தைக் கொடுத்தார்கள். பின்னால் எந்த ஒரு கட்டத்திலும் அவர்கள் இப்பணத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவேயில்லை. பணமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

அந்த நண்பர்களை இன்றும் நான் நன்றி யோடு நினைவு கூர்கின்றேன்.

பணம் கொடுத்ததோடு சரி மலர் தொடர் பான எந்த ஒரு வேலையிலும் அவர்கள் தங்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. ஒவ்வொரு இதழும் வெளிவந்ததும் அதை வாங்கிப் பார்த்து விட்டு "ஆகா பிரமாதம்" என்று என்னைத்தட்டிக் கொடுத்த அன்பை மட்டும் மறக்க முடியாது.

## 6. ஆயத்தங்கள்:

ஏற்கனவே வெளிவந்த பல சஞ்சிகைகள் இடையில் நின்று போனதால் அப்படி நேராமல் இருக்க சில முன் ஆயத்தங்களைச் செய்து 'மலரை' நிலைக்கச் செய்ய வேண்டும் என எண்ணினேன். அந்த வகையில் பின்வரும் முன் ஏற்பாடுகளைத் தனி ஒருவனாகவே செய்தேன்.

1 "மலர்" பற்றிய ஒரு விரிவான துண்டுப் பிரசுரம்
2. நாடெங்கிலும் பிரபலம் பெற்றிருந்த எழுத்தாளர்களிடம் கதை, கட்டுரை, கவிதை கோருதல்.
3. டிமை அளவில் பெரிய போஸ்ரர்.
4. முக்கியமான மாவட்டங்களில் "மலர்" பிரதி நிதிகள் நியமனம் (இணைப் பாளர்கள்)
5. முக்கியமான நகரங்களில் விற்பனைப் பொறுப்பாளர்கள் நியமனம்.
6. முன்கூட்டியே போதுமான அளவு விளம்ப ரம் சேகரித்தல்.
7. முன்கூட்டியே சந்தாதாரரைச் சேர்த்தல்.
8. முன் கூட்டியே மூன்று இதழ்களுக்கான விடய தானங்களைச் சேர்த்து வைத்தல்.
9. அச்சக ஏற்பாடு.
10. தேவையான புளொக்குகளைச் செய்தல் (கொழும்பு)
11. "மலர்" வெளியீட்டு விழா.
12. கடிதத்தலைப்பு (Letter Head) பற்றுச் சீட்டுப் புத்தகம், சந்தா விண்ணப்பப் பத்திரம் முதலியன.
13. விற்பனையாளர், விளம்பரதாரர்களுக்கான வேண்டுகோள்கள்.
14. பாடசாலை ஆசிரியர்களிடம் வேண்டு கோள்கள்.

இவை எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக யோசித்து திட்டமிட்டுத் தயார் செய்தேன். அச்ச கத்துக்கான "டம்மி" தயார் செய்து கொண்டு முதல் இதழுக்கான பைலுடன், அச்சகம் சென்று ஒவ்வொரு பக்கமும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை விபரமாக விளக்கினேன்.

## 7. முதல் இதழ்:

முதல் இதழ் ஜனவரி 1970 தயாராகியது. கவர்ச்சியான முன் அட்டை–(இருவர்ணத்தில்) கிரவுண் 1/4 அளவு –48 பக்கம் விலை சதம்/50 ஆண்டுச்சந்தா ரூ6/= பொருளடக்கப் பக்கமும் கவர்ச்சியாக அமைக்கப்பட்டது. புத்தகம் ஒன்று மலர் போல் விரிந்திருக்க அதன் மேல் வண்டு ஒன்று மொய்ப்பது போன்ற "மலர்" சின்னம். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகும்" என்ற பாரதியின் கவி வரிகள் motto வாசகம். பொருளடக்கம், கதை, கவிதை, கட்டுரை பிற என வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 4 ஆக்கங்கள் இடம் பெற்றன. உள்ளே ஒவ்வொரு ஆக்கத்துடனும் அதை எழுதியவரின் புகைப்படம் சிறுகுறிப்புகள் என்பன இடம் பெற்றன.

கதை, கவிதை, கட்டுரைகளுடனும் நிறையப் படங்கள் சேர்க்கப்பட்டன.

முதல் இதழில் பின்வரும் ஆக்கங்கள் இடம் பெற்றன (1)கதை: யுகங்கள் கணக்கல்ல (கவிதா) வர்ணபேதம் (அ. ஸ. அப்துஸ்ஸமது) கடல் தந்தகாவலன் (அருள் செல்வநாயகம்) தியாகங்கள் பாரமா (அருள் சுப்பிரமணியம்) (2)கவிதை: மலர்ப்பெண் (திமிலைத்துமிலன்) இதுவும் அதுவும் (அண்ணல்) பாடம் (எருவில் மூர்த்தி) கவிபாடத்துணை வேண்டும் (அன்பு முகையதின்) கூர்கெட்ட வீதி (கு. ராமச் சந்திரன்) (3) கட்டுரை–ஈழத்துவாசகர் களுக்கு ஒரு வேண்டுகோள் (அன்புமணி) தமிழ் இலக்கியத்தில் திருக்குர்ஆன் (ஜே.எம்.எம் அப்துல்காதர்) மற்றும் 'வணக்கம்' தலையங்கம் (மலர்மணம்) முதலியன

சஞ்சிகையின் வடிவமைப்பும் பக்கவடி வமைப்பும் நன்கு அமைந்து "மலரு" க்கு ஒரு எடுப்பான தோற்றத்தை அனித்தது. பார்த்த வர்கள் பாராட்டினார்கள்

## 8. மலர் வெளியீட்டுவிழா:

'மலர்' வெளியீட்டு விழாவை மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடாத்துவதற்கு பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எங்கும் "மலர்" என்பதே பேச்சு 3.1.1970ல் இவ்விழா நடைபெற

விருந்தது சுவரொட்டிகள் பதாகைகள் துண்டுப்பிரசுரங்கள் அமர்க்களப்பட்டன. முக்கிய பிரமுகர்களுக்கெல்லாம் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. ஆனால் என்ன துரதிஷ்டம் விழா நடைபெறவிருந்த 3ம் தேதி காலையிலிருந்தே கடும் மழை. அபசகுனம் போல் இப்படி ஆகிவிட்டதே என அன்பர்கள் கவலைப் பட்டனர். வேறுவழியின்றி விழா 12. 01. 1970க்கு ஒத்திப்போடப்பட்டு நடைபெறாமல் மீண்டும் 24.01.1970ல் இவ்விழா மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்விப்பணிப்பாளர் வெ. சங்கரலிங்கம் மாநகர முதல்வர் ஜே.எல். திசவீரசிங்கம் பிரதம கல்வி அதிகாரி எம். சமீம். மட். தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் ரீ. பாக்கிய நாயகம், கவிஞர் திமிலைத்துமிலன், கவிஞர் "மஹாகவி" ஆகியோர் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். ஆசிரியர் அன்புமணி மலர் முதல் ஏட்டின் தலையங்கத்தை வாசித்து சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். சங்கீத பூசணம் என். ராஜா அவர்களின் தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமானது. விழாக்குழு, செயலாளர் ஏ.ஜே. மங்களராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

## 9. முதல் இதழின் மூச்சு:

'மலர்' முதல் இதழில் சில காத்திரமான விடயங்கள் சொல்லப்பட்டிருந்தன. "வணக்கம்" என்ற குறிப்பில் இருந்து சில பகுதிகள் வருமாறு "ஈழம் தனித்துவ முடையது. ஈழத்து எழுத்துத் தனித்துவ முடையது. ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு விரிவான களம் அமைத்துக் கொடுக்கும் எண்ணத்துடன் "மலர்" மலர்கின்றது.

"இன்றைய இலக்கிய உலகில் கோஷ்டிப் பிரிவு ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் பரவிக் கிடக்கிறது. ஆனால் "மலர்" அதற்கு விதி விலக்கானது உங்கள் கைகளில் இருக்கும் முதல் ஏடே அதற்குச் சான்று. உண்மை, நேர்மை, நடுநிலை–இதுவே 'மலர்' ஏட்டின் தாரகமந்திரம்.

'மலர் மணம்' என்ற ஆசிரியத் தலையங்கத்திலிருந்து ஒரு பகுதி வருமாறு–

"ஈழத்தில் இலக்கியத் தரம் வாய்ந்த பத்திரிகை இல்லாத குறையைப் போக்குவதற்காக இந்தச் சஞ்சிகையை வெளியிடுகிறோம்" என்று எல்லோரையும் போல் பீற்றிக் கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அக் குறையை இந்தச் சஞ்சிகையினால் மட்டும் போக்கிவிட முடியாது. ஆனால் ஈழத்தில் இலக்கியத் தரம் வாய்ந்த பத்திரிகைகள் பல தோன்ற வேண்டும் என்ற எமது ஆத்மார்த்தமான ஆசையின் காரணமாக இச் சஞ்சிகை வெளிவருகிறது என்பதை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறோம்".

"ஈழத்து வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள் என்ற கட்டுரையிலிருந்து சிலவரிகள்–

✷ தேசிய உணர்வுடன் எமது சஞ்சிகைகளை நோக்க வேண்டும்.

✷ எமது எண்ணங்கள் புனிதமானவை. எமது லட்சியங்கள் மகத்தானவை. எமது முயற்சிகள் இதய சுத்தமானவை. அதனால் அரசியல் கலப்பில்லாத இலக்கியத் தரம் வாய்ந்த ஒரு உயர்ந்த ஏடாக "மலர்" சஞ்சிகையை வெளியிட ஆத்மார்த்தமாக உழைக்கின்றோம்.

## 10. பிரதிபலிப்புகள்:

"மலர்" முதல் இதழ் வெளிவந்ததும் ஈழத்து இலக்கிய உலகில் ஏற்பட்ட பிரதிபலிப்புகள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும்.

1. அப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டு மிக வேகமாகப் பிரபலமடைந்த 'சிந்தாமணி' வார மலரில் "அத்தாணி மண்டபம்" என்ற பெயரில் ஒருபத்தியை அதன் ஆசிரியரான எஸ்.டி.சிவநாயகமே "அரசகேசரி" என்ற பெயரில் எழுதி வந்தார். அதில் "மலர்" சின்னத்தைப் பிரசுரித்து அதன் அர்த்த புஷ்டியான கற்பனையைப் பாராட்டி ஒரு நீண்ட குறிப்பு அவரால் எழுதப்பட்டிருந்தது.

2. பல பிரபல எழுத்தாளர்கள் பாராட்டுக் கவிதைகளும், மடல்களும் அனுப்பியிருந்தனர். அவற்றுள் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தின், கலாநிதி சு. வித்தியானந்தன், இ. பாலசுந்தரம், பாண்டியூரன், கா. சிவபாலன், சொக்கன், நா. சுப்பிரமணிய ஐயர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

3. பிரபல எழுத்தாளர்கள் பலர் தங்கள் ஆக்கங்களை அனுப்பிவைத்தனர். அவை அடுத் துவந்த மலர் இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன.

4. பல ஈழத்து இலக்கிய ஏடுகளில் 'மலர்' பற்றிப் பாராட்டுக்குறிப்புகளும், விமர்சனங் களும் வெளிவந்தன.

5. ஒரு கசப்பான உண்மை என்னவெனில் பாராட்டுகள் வந்து குவிந்த அளவுக்கு சந்தாக் கள் வந்து குவியவில்லை என்பது தான். இலக் கிய சிற்றேடுகளுக்கு இது ஒரு பொதுவான விதிபோலும். கடைகளிலும் காசு கொடுத்து வாங்க மாட்டார்கள். சந்தாதாராகவும் சேரமாட் டார்கள்.

## '(11)மலர்' சஞ்சிகையின் தனித் துவம்:

இன, பேத, பிரதேச வேறுபாடு இல்லாது, அரசியல் கலப்பில்லாது, முழுக்கமுழுக்க சத்திய மான இலக்கியத் தேடலுடன், 'மலர்' வெளிவர வேண்டும் என்பது எமது கோட்பாடாக இருந்தது. அந்த வகையில், முஸ்லிம் எழுத்தாளர்களும், தமிழ் எழுத்தாளர்களும் 'மலர்' சஞ்சிகையில் எழுதினர்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மலையகம், திருக்கோணமலை, மட்டக்களப்பு, அக்கரைப் பற்று முதலிய பிரதேசங்களிலிருந்து முதிய எழுத்தாளர்களும், இளம் எழுத்தாளர் களும் 'மலரி'ல் எழுதினர் இப்பிரதேசங்களில் விற்பனைப் பிரதிநிதிகளும் இயங்கினர். இணைப்பாளர்களும் செயற்பட்டனர்.

அந்தவகையில் நல்லை அமிழ்தன் (யாழ்ப் பாணம்) அருள் சுப்பிரமணியம் (திருக்கோண மலை) கு. இராமச்சந்திரன் (மலையகம்) மருதூர் மஜீத் (கல்முனை) சிவப்பிரகாசம் அக்கரைப் பற்று) குறிப்பிடத்தக்கவர்கள்.

மலையகத்து வரவேற்பு மிக முக்கியமானது. கு. இராமச்சந்திரன், (கொழும்பில் வாசம்) பெரிதும் உதவினார். இரா. சரஸ்வதி ஆசிரியை (ஸ்பிறிங் வலி) ஒரு மாதச் சம்பளத்தை அன்பளிப்புச் செய்தார். பண்டாரவளை குமார், இராமநாதன் மற்றும் பலர் எழுதினர். அவ்வாறே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, தென்னிலங்கை முதலிய பிரதே சங்களிலிருந்தும் வாசகர்களும், எழுத்தாளர் களும் அமோக ஆதரவளித்தனர். இது எமக்குப் புதிய உற்சாகம் அளித்தது. புதுத் தெம்பு பிறந் தது.

## 12. சந்தா வேட்டை:

முதல் இதழ் வெளிவந்ததும், சந்தா வேட்டையும், விளம்பர வேட்டையும் மேற்கொள்ள வேண்டும் என ஏற்கனவே திட்டமிட்டிருந்தோம். அதன்படி, குறித்த ஒரு தினத்தில் நானும் மற்றும் இலக்கியக் குழு நண்பர்களும் ஒரு வாடகைக் காரில் "மலர்" கட்டுக்களை ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிப் புறப்பட்டோம்.

வழியில் உள்ள ஒவ்வொரு பாடசாலையாக இறங்கி, அதிபருடன் கலந்துரையாடி சந்தா பத்திரமும், "மலர்" பிரதிகளும் கொடுத்தோம். பாடசாலையில் உள்ள ஆசிரியர் எண்ணிக் கையில் 1/2 பங்கு அளவில் மேற்படி ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன. சில பாடசாலைகளில் திருப்தியாகவும் பல பாடசாலைகளில் அதிருப்தி யாகவும் சந்தாக்கள் சேர்ந்தன. (இது நாம் எதிர் பார்த்ததுதான்)

ஆனால் வழியில் ஒரு மறக்க முடியாத அனுபவம் ஏற்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும்.

எமது வாடகைக் காரில், பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஒரு அன்பர் ஏறிக்கொண்டார். அவர் "மலர்" பிரதியை விரித்துப் பார்த்துவிட்டு "என்னையும் ஒரு சந்தாதரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள் எனக்கூறி அப்போதே ஒரு வருடச்சந்தா ரூ. 6/= ஐக் கையளித்தார். இது எங்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. பின்னர் அவரைப்பற்றி விசாரித்ததில் அவர் காரைதீவைச் சேர்ந்தவர் என்றும் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் பாலசுந்தரம் என்றும் அறிந்தோம்.

## 13. விளம்பர வேட்டை:

ஒவ்வொரு இதழுக்கும் தேவையான விளம்பரங்களைச் சேர்ப்பதும் "புளொக்குகள்" செய்வதும் என் பொறுப்பாக இருந்தது. இதற்காக ஒவ்வொரு மாதமும் நான் கொழும்பு செல்வேன்.

கொழும்பில் பி.எல். குணவர்த்தனா அன்ட் சன்ஸ் என்பது கிராண்ட் பாஸில் ஒரு முடுக்கில் இருந்தவீடு. அதில் தகப்பனும் பிள்ளைகளும், குடும்பமாக இந்த புளக் வேலைகளைச் செய்வார்கள். நண்பர் கு. இராமச்சந்திரனே இந்த இடத்தை எமக்கு அறிமுகப்படுத்தினார்.

காலையில் படங்களைக் கொடுத்தால் மாலையில் புளொக்குகள் கிடைக்கும் (அல்லது பார்சலில் பின்னர் அனுப்பி வைப்பார்கள்)

குறைந்த கட்டணம் என்பதால் இந்த இடத்தை நாம் நாடினோம்.

அவ்வாறே கொழும்பில் விளம்பரங்கள் சேர்ப்பதற்கும் 'முறிய' வேண்டி இருந்தது. அப்போது கொழும்பில் "ஸ்ரார் பிரான்ட் டொபி" நிறுவனத்தில் நண்பர் தெளிவத்தை ஜோசப் கணக்காளராக இருந்தார். அவரிடம் கட்டுரைக்காக மட்டுமல்லாது விளம்பரத்துக்காகவும் செல்ல வேண்டியிருந்தது.

மற்றும் "யானை பீடிக்கம்பனி" (நீதிராஜா) மகாராஜா நிறுவனம், இரஞ்சனா அச்சகம், அப்துல்லா இண்டஸ்ரீஸ், சின்னத்துரை பிரதர்ஸ் முதலிய இடங்களிலிருந்தும் விளம்பரங்கள் பெற்றோம். 'கல்லில் நார் உரிப்பது' என்ற பழமொழியின் உண்மையை நான் நேரில் அனுபவித்தேன். சில இடங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் பின் கொழும்பில் விளம்பரம் சேகரிப்பதை நிறுத்திவிட்டு, கல்முனை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு என உள்ளூர்களில் மட்டுமே விளம்பரங்களைச் சேகரித்தோம்.

## 14. வாசகர்கள் அளித்த உற்சாகம்:

சஞ்சிகை அளவில் குறைந்தாலும், தாமதமாக வெளிவந்தாலும் அதில் வெளிவந்த ஆக்கங்கள் கனதியாக இருந்தமையால், வாசகர்கள் அளித்த உற்சாகம் எமக்கு உந்து சக்தியாக அமைந்தது.

சஞ்சிகை முதல் இதழ் வெளிவர முன்பே மன்னாரிலிருந்து கரவைக்கிழார் கந்தசாமி என்பவர் தமது நண்பர்களிடமிருந்து 25 சந்தாக்களைச் சேகரித்து அனுப்பியிருந்தார். அதுபற்றி 2வது இதழில் குறிப்பிட்டிருந்தோம் (பக் : 59)

மலையகத்தில், ஸ்பிறிங்வலியில் ஆசிரியையாக இருந்த இரா சரஸ்வதி, தனது மாதச் சம்பளத்திலிருந்து ஒரு சிறுதொகையை மாதாமாதம் அனுப்பி வந்தார். இதுபற்றி ஜூன் 70 இதழில் குறிப்பிட்டிருந்தோம் (பக் : 35)

கல்முனைப் பயணத்தின்போது, 'மலர்' சஞ்சிகையின் முதல் இதழைப் பார்த்துவிட்டு, அந்தக் கணமே ஒரு வருட சந்தாவை ஒப்படைத்த கலாநிதி பாலசுந்தரம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இந்த அனுபவம் பற்றியும் "மலர்" 2வது இதழில் குறிப்பிட்டிருந்தோம் (பக் : 34)

இவை தவிர மாதம் தோறும் வாசகர்களின் பாராட்டுக் கடிதம் ஏராளமாக வரும்; அவற்றையெல்லாம் பைல்களில் கட்டுக் கட்டாகக் கட்டிவைத்தோம் (ஒவ்வொரு இதழுக்கும் தனித்தனி பைல்)

இவ்வாறு பரவலான Moral Support இருந்தாலும் பொருளாதார ஆதரவு குறைவாகவே இருந்தது என்பதை சொல்லத்தான் வேண்டும்.

## 15. மலர் இரண்டாவது இதழ்:

'மலர்' இரண்டாவது இதழ் (பெப்ரவரி 1970) குறித்த நேரத்தில் வெளிவந்தது. இவ்விதழில் பின்வரும் ஆக்கங்கள் இடம் பெற்றன.

(1) கதை :– வாழ்வின் பெருமை (இரா. சரஸ்வதி) யாக குண்டம் (செங்கை ஆழியான்) காட்டுப்பூ (வ.அ. இராசரெத்தினம்) தியாகங்கள் பாரமா, 2ம்பகுதி) (அருள் சுப்பிரமணியம்) அந்த வீட்டின் புதியகதை (செ. யோகநாதன்)

(2) கவிதை :– வினாவிடை (மஹாகவி) இறப்பில்லா இறந்த காலம் (எம். ஏ. நுஃமான்) சமநீதி (சர்வானந்தன்) வாழ்வுக் கடனிலே (கருணையோகன்– தற்போதைய இ.ப.க. விரிவுரையாளர் கலாநிதி (செ. யோகராசா) கவிதை பாடாமல் இறப்பேனோ (செ. குணரத்தினம்) ஈழமதில் எழுந்த மலரே (வே. ஐயாத்துரை)

(3) கட்டுரை :– தர்மத்திற்காகப் போராடுக (பீ. மரியதாஸ்) எனக்குப் பிடித்தது (மு.ஹ. சேகு இஸ்ஸதீன் (வேதாந்தி) தற்போது பா.உ. தவிசாளர் முஸ்லிம் காங்கிரஸ்) மலர் வெளியீட்டு விழா (மணி)

(4) பிற :– வணக்கம், வளர்ச்சிக்குவழி (தலையங்கம், ரீங்காரம் (வாசகர் கடிதம்) ஈழத்து ரத்தினங்கள் (நறுக்குகள்) வீசும் தென்றல் ( செய்திகள்)

'மலர்' முதல் இதழைவிட 2வது இதழில் கனதியான விடயங்கள் இடம்பெற்றன. ஈழத்து இலக்கிய உலகில் பிரபலம் பெற்ற எழுத்தாளர்

களின், ஆக்கங்கள் இடம் பெற்றன. முதல் இதழில் இடம் பெறாத சில அம்சங்கள் இடம்பெற்றன. வாசகர்களுக்கான சில போட்டிகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு மாவட்டத்தில் அறிமுக விழா வைப்பதென ஏற்கனவே திட்டமிட்டிருந்தோம். அதன்படி இவ்விதழுக்கான அறிமுகவிழா யாழ்ப் பாணத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## 16. "மலர்" அறிமுகவிழா (யாழ்ப்பாணம்)

விழாக்கள் பல கண்ட யாழ்ப்பாணத் திறந்தவெளி அரங்கில், மிக அபூர்வமாக நடைபெறும் விழாக்களில் ஒன்றாக 'மலர்' அறிமுகவிழா அமைந்தது.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். யூ. சோமசேகரன் மங்கல விளக்கேற்றினார். அரியாலை வே. ஐயாத்துரை தமிழ் வாழ்த்துப் பாடினார். பிரபல எழுத்தாளர் சொக்கன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

செங்கை ஆழியான், யாழ்வாணன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். கவிஞர் வி. கந்தவனம் அறிமுக உரை நிகழ்த்தினார். மலர் முதற்பிரதியை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் பெற்று விற்பனையை ஆரம்பித்து வைத்தார். விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ஈழநல்லூர் அருணா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், குமார் தனபால் குழுவினரின் "தம்பி கொழும்பிலை" நகைச்சுவை நாடகமும் சபையோரை வெகுவாக கவர்ந்தன. இந்த நாடகம் 59வது தடவையாக மேடை ஏறியது என்பது குறிப்பிடத்தக்கது. ஈழ நல்லூர் தமிழாலயா கலை நிறுவனத்தின் "வீரபாண்டிய கட்டபொம்மன்" என்னும் நாடகமும் இடம்பெற்றது. இந்நாடகத்தில் முழுக்க முழுக்க சிறுவர்களே நடித்தனர்.

இவ்விழா ஏற்பாடுகள் அனைத்தையும் அப்போது மட்டக்களப்பு கல்வித் திணைக் களத்தில் கடமையாற்றிய கவிஞர் நல்லை அமிழ்தனே செய்து முடித்தார்.

இவர் பின்னர் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று "முன்னோடிகள்" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி, காத்திரமான பல இலக்கியப் பணிகளைப் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 17. யாழ்ப்பாணத்தில் சந்தா வேட்டை:

யாழ்ப்பாணத்திலும் சில இடங்களில் நேரில் சென்று சந்தா சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கிருந்தது. அறிமுகவிழா நடைபெறவிருந்த தினம், பகல் முழுவதையும் இதற்காகச் செலவிட்டேன். யாழ் கச்சேரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, யாழ். தொழில் நுட்பக்கல்லூரி முதலிய இடங்களுக்குச் சென்று வழக்கமான பல்லவியைப் பாடினோம்.

இந்த இடங்களில் தெரிந்த நபர்கள் இருந்தபடியால்தான் இம் முயற்சியை மேற் கொண்டோம் என்றாலும் ஒரு வகையான நிர்ப்பந்தத்தின் பேரிலேயே சந்தா பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன. பலாலி ஆசிரியர் கலாசாலையில், எமக்குத் தெரிந்த அதிபர் கந்தையாவும், தொழில் நுட்பக் கல்லூரியில் எமது மைத்துணர் ஆறுமுகமும் ஒத்துழைப்புத் தந்தனர். ஒவ்வொரு இடத்திலும் 50 பிரதிகளை கொடுத்தோம். (பின்னர் அனுப்பிய இதழ்கள் முழுமையாக விநியோகம் ஆகாமல் தேங்கியது ஒரு சோகம்) யாழ். கச்சேரியில் எங்களுக்கு மிகவும் கசப்பான அனுபவம் எற்பட்டது. அப்போது அங்கு நிர்வாக உத்தியோகத்தராக இருந்த முருகேசம்பிள்ளை என்பவர் நாங்கள் சென்ற நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல்– நேரத்தின் அருமை தெரியாமல் சுயபுராணம் பாட ஆரம்பித்து விட்டார். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தோம். உள்ள ஒரு நாளைக்குள் பல இடங்களுக்குச் செல்ல வேண்டும்– வாடகை கார் கட்டணம் வேறு ஒரு மணித்தியாலம் செலவாகியும், ஒரு பிரதி கூட விநியோகம் ஆகாமல் மிகுந்த வெப்பி சாரத்துடன் கச்சேரியிலிருந்து வெளி யேறினோம்.

*(மிகுதி அடுத்த இதழில்)*

மூச்சுவிடப் பொழுதில்லை
இங்கே முழு நேர
வேலை!

வேலையென்று
வந்த பின்னே; நின்று
வேவு பார்க்க மனமில்லை

தூக்கமில்லை
குளிப்பில்லை
தூரத்தில்....
உறவுகளை எண்ணி
துக்கம் காப்பதற்கும்
துளிகூட நேரமில்லை

பாதி வெந்த அரிசியை
பழஞ்சோற்றை
உப்பில்லா கறியை
உண்ணும் பொழுதுகளில்

உலை கொஞ்சம்
சுணங்கியதால்
மனைவியின்
தலையுடைத்த நண்பனும்

அடுப்பெரிய மறுத்தனால்
அக்காவை
அடித்துவிட்ட ஓர் தம்பியும்.

உப்பில்லை என்பதற்காய்
தாயை
தப்பாய் ஏசி விட்ட
ஒரு மகனும்

புத்திமதி சொன்னதற்காய்
அப்பாவை
அன்னியராய் நோக்கிய
பிள்ளையும்– இங்கே
கண்ணீர் விடுகின்றனர்.

நேசம் கொண்ட
உறவுகளின்
நெருக்கம் குறைந்ததனால்
பாசம் கொண்ட நெஞ்சு
இங்கே
பாகாய் உருகுகிறது.

வாசமுல்லைப் பூ நிறைந்த
தேசமென எண்ணியவர்கள்
ஏன் வந்தோம் இங்கென்று
ஏக்கம் தான் கொள்கின்றனர்.

ஆடுகளாய் மாடுகளாய்
சில அரபிகளும்
இருப்பதனால்
பாவம் இந்த கூலிகள்
பாடும் அவஸ்த்தை
சொல்லி மாளாது.

# அலறும் இதயங்கள்

–நாச்சியாதீவு பர்வீன்
(கட்டாரிலிருந்து...)

## பயணியின் பார்வையில்... !



மரணம் எவருக்கும் எப்போதும் வரலாம். பிறப்பு நியதி; மரணமும் நியதி.

ஒரு ஜீவன் பிறந்தவுடன் குதூகலம் கொள்ளும் நாம், மற்றொரு ஜீவனின் மறைவின்போது துயரடைகின்றோம். மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபமும் அஞ்சலியும் தெரிவிக்கின்றோம்.

வீதியில் நாம் வாகனங்களில் பயணிக்கும் பொழுது மரண ஊர்வலம் தென்பட்டால் இருக்கையிலிருந்து எழுந்து மரியாதை செலுத்துகிறோம்.

காவல்துறையில் – பாதுகாப்புப் படையில் எவரும் உயிர்த்துறக்க நேர்ந்தால் இதர காவல்துறையினரும் படையினரும் தமது தொப்பியை கழற்றி இறுதி மரியாதை செலுத்துவர்.

எம்மோடு வாழ்வதற்கு இப்பூவுலகில் பிறந்த ஒருவர் மரணத்தால் பிரியும் பொழுது – நாம் அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பூதவுடலின் முன்னே எழுந்து நிற்போம்.

அஞ்சலியும் அனுதாபமும் பூதவுடலுக்குத் தான். நாம் எழுந்து நிற்பதும் பூதவுடலுக்கான மரியாதைக்காகத்தான்.

# யாழ். தேவி; யார்தேவி ?

முருகபூபதி
(அவுஸ்திரேலியா)

பரஸ்பரம் மரியாதை செலுத்துவதற்காக எழுந்து நிற்பதற்கும், ஒருவரைக் கண்ட மாத்திரத்தே, அமர்ந்திருப்பவர் சடாரென எழுந்திருப்பதற்கும் வேறுபாடு உண்டு.

நாம் – வயதிற்கா – அந்தஸ்த்திற்கா – பதவிக்கா – மரியாதை வழங்க எழுந்து நிற்கிறோம் என்பதும் முக்கியமானது.

நீதிமன்றில் – நீதிபதி வருவதைக் கண்டதும் அவர் தனது ஆசனத்தில் அமரும் வரையில் எழுந்து நிற்கிறோம். இங்கு நீதிக்கே மரியாதை.

இலங்கையில் அலுவலகங்களில் தொழிற்சாலைகளில் மேலதிகாரிகளையோ, முதலாளி களையோ கண்டு விட்டால், மரியாதை நிமித்தம் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் எழுந்து நிற்பர்.

இவ்விதம் மரியாதை பெறுபவர் – அது கிடைக்காத பட்சத்தில் பழிவாங்கவும் கூடும் – என்ற அச்சத்தில் 'போலி' த்தனமாக எழுந்து நிற்பவர்களையும் அறிந்திருக்கிறோம்.

இவ்விதம் எழுந்து நிற்பதும் மரியாதை செலுத்துவதும் இடத்துக்கு இடம் மாறுபட்ட நோக்கங்களில் தங்கியிருக்கும்.

சிற்றூழியர் (பியோன்) நடைமுறையில் இல்லாத அவுஸ்திரேலியா போன்ற நாட்டில் – பாடசாலைகளில் கல்லூரிகளில் – பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் ஆசிரியர்களை, விரிவுரையாளர்களை பெயர் சொல்லி அழைக்கிறார்கள்.

டீச்சர், சேர், மிஸ் என்று அழைப்பது அபூர்வம். எனது பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் ஆசிரியர்களை பெயர் சொல்லி அழைப்பது அசௌகரியமாக இருந்தது.

இவர்கள் தமது ஆசிரியர்களை டீச்சர், சேர், மிஸ் என்று அழைத்தபோது ஏனைய மாணவர்கள் விநோதமாகப் பார்த்தார்கள்.

காலப்போக்கில் இந்த நாட்டின் பழக்கத்திற்கே தம்மையும் மாற்றிக் கொண் டனர்.

நான் அறிந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவம், உங்களையெல்லாம் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும்.

ஐரோப்பிய நாடொன்றில் புலம்பெயர்ந்து வாழும் ஒரு பெண் படைப்பாளி (இவர் பெண்ணி லைவாதி) தமிழ்நாட்டில் ஒரு பிரபல பத்திரிகை அலுவலகத்திற்கு சென்று பிரதம ஆசிரியருடன் உரையாடினார்.

உரையாடும்போது பலதும் பத்தும் பேசியிருக்கிறார்கள்.

ஆசிரியரின் அறையில் ஒரு புத்தக அலுமாரி. அதில் ஏராளமான புத்தகங்கள்.

இவர்களின் உரையாடலின்போது பேச்சு வாக்கில் ஒரு புத்தகத்தின் பெயர் வந்திருக்கிறது.

அந்தப் புத்தகம் அலுமாரியில் இருக்கிறது. அதனை வந்திருக்கும் பெண் படைப்பாளிக்கு காண்பிக்க ஆசிரியருக்கு விருப்பம்.

உடனே ஆசிரியர் – தமது மேசையிலிருந்த அழைப்பு மணியை அழுத்துகிறார். அவரது சிற்றூழியரான பியோன் எங்கிருந்தோ ஓடிவந்து, ''என்ன சேர்'' என பவ்வியமாக கேட்கிறார்.

''இந்த செல்ஃபில், அந்த புத்தகத்தை எடுத்துத்தாரும்'' – என்று கட்டளை பிறப்பிக் கிறார் ஆசிரியர்.

வந்திருந்த பெண்ணிலைவாதியான படைப்பாளிக்கு மூக்குநுனியில் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

''உமக்குப் பக்கத்திலிருக்கிற புத்தகத்தை எடுத்துக் காண்பிக்க – ஒரு ஊழியர் உமக்குத் தேவையாக இருக்கிறதா.....? நீங்கள் எல்லாம் என்ன ஜன்மம்.....''

எனச் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார்.

ஆசிரியர் திகைப்பில் உறைந்துபோனார்.

அந்தப் பெண்ணிலைவாதி வாழும் ஐரோப்பிய நாட்டுச் சூழலுக்கும் அந்தப் பத்திரிகை ஆசிரியர் வாழும் இந்தியாவின் தமிழ் நாட்டுச்சூழலுக்கும் நிரம்ப வேறுபாடுகள். எத்தனை கோணங்கள்! எத்தனை பார்வைகள்!

ஒரு பயணத்தின்போது எதிர்பாராத விதமாக தமிழ் நாட்டில் கவியரசு கண்ண தாசனின் இரண்டாவது மனைவி பார்வதி அம்மாளின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள நேர்ந்தது.

கண்ணதாசனின் குடும்பத்தினரை எனக்கு ஏற்கனவே நன்கு தெரியும் . இந்த நட்புறவு இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது. 1984 இல் ஒரு சித்திரைப் புதுவருடத்தின் போது கண்ணதாசனின் மனைவி பார்வதி அம்மாளும் மருமகள் மீனாவும் (காந்தி கண்ணதாசன் மனைவி) நன்கு உபசரித்தனர்.

1990 ஆம் ஆண்டு, ஒரு சித்திரை மாதம் நோய்வாய்ப்பட்டு விஜயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பார்வதி அம்மாளை பார்த்தேன்.

நன்றாக உரையாடிக்கொண்டிருந்தவர் மறுநாள் காலை மரணமடைந்துவிட்டார்.

பூதவுடல் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இச்சமயம், கண்ணதாசனின் முதல் மனை வியின் மகன் கலைவாணன் கண்ணதாஸன் ''வா அருகில் வா'' படப்பிடிப்பின் ஆரம்ப வேலைகளில் மூழ்கியிருந்தார். அவர் அப்படத் தின் இயக்குநர்.

கண்ணதாசனின் குடும்பத்தினரை எனக்கு அறிமுகப்படுத்திய விக்கினேஸ்வரன் – கண்ணதாசன் பதிப்பகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். நானும் விக்னேஸ்வரனும் தகவல் சொன்னதையடுத்து கலைவாணன் கண்ணதாசனின் காரில் விரைந்தோம்.

திரையுலகத்தினர் வந்து அஞ்சலி செலுத் திக் கொண்டிருந்தனர். இங்கு பல அரசியல் உலக பிரமுகர்களையும் சந்தித்தேன்.

மறுநாள் இறுதிச் சடங்கு.

அன்று காலையிலேயே நானும் நண்பர் டொமினிக் ஜீவாவும் மரண வீட்டுக்குச் சென்றோம். பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு வெளி முற்றத்தில் கதிரைகளில் அமர்ந் தோம். அருகிலிருந்த பத்திரிகைகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எம்மைப் போல் அஞ்சலி செலுத்த வந்தவர் கள் அங்கிருந்த கதிரைகளில் அமர்ந்திருக்கின் றனர்.

திடீரென்று சிறு பரபரப்பு.

எம்மைச் சுற்றியும் அமர்ந்திருந்தவர்கள் எழுந்து நின்றார்கள். பத்திரிகைகளை வாசிப்பதில் மூழ்கியிருந்த நானும் ஜீவாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

ஒரு மனிதர் உருவத்தில் சற்றுப்பெரியவர் வெள்ளை சேர்ட், வெள்ளை வேட்டி அணிந்து மெதுவாக கம்பீர நடை நடந்து வந்து என்னருகே அமர்ந்தார்.

யார் என்று தெரியாத நிலையில் நான் தொடர்ந்தும் பத்திரிகைகளில் மூழ்கிவிட்டேன்.

அருகில் இருந்தவர்கள் அனைவரும் ஜீவாவைத் தவிர எழுந்து நிற்கிறார்கள்.

வந்தவர் அமர்ந்ததும் காந்தி கண்ண தாசன் அருகில் வந்து பவ்வியமாக நின்று பேசுகிறார். தாயாரின் சுகவீனம் – மருத்துவ மனை அனுமதி – மரணம் .... இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

வந்திருக்கும் அந்தப் பிரமுகரை கூர்ந்து பார்த்தேன். எங்கோ பார்த்த முகம். திரையில் பார்த்த மேக்கப்முகம்.

மேக்கப் இல்லாத நடிகர் திலகம்தான் வந்த பிரமுகர். சுற்றியிருந்தவர்கள் எழுந்து மரியாதை செலுத்தியது சிவாஜிகணேசனுக்குத் தான் என்பது அப்பொழுதுதான் புரிந்தது.

அஞ்சலி செலுத்த வந்தவர்கள், தம்மைப் போன்று அஞ்சலி செலுத்த வந்தவர்கள் பிரமுகர்களாக – பிரபல்யங்களாக இருந்தாலும் மரியாதை செலுத்த எழுந்து நிற்க வேண்டிய விதியை நினைத்துக் கொண்டேன்.

மேக்கப்பிலேயே சிவாஜியை பார்த்துப் பழக்கம் இருந்த எனக்கு – மேக்கப் இல்லாமல் வந்த சிவாஜியை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போனதும் விதியா?

வந்தவர் சிவாஜிதான் என்பது நிச்சயமாக தெரிந்திருந்தால் நானும் மற்றவர்களைப் போன்று எழுந்து நின்றிருப்பேனா?

இச்சம்பவத்திற்குப் பின்பு – இலங்கையில் நடந்த ஒரு நிகழ்வு !

எனது நண்பரின்தாயார் இலங்கையில் மரணமடைந்தார். அச் சமயம் எதிர்பாராதவிதமாக நீர்கொழும்பில் நின்ற நான் அந்த மரணச்சடங் கிலும் கலந்து கொண்டேன்.

அஞ்சலி செலுத்த வீட்டுக்கு சென்ற சமயம் பத்திரிகை உலகப் பிரமுகர் வந்தார். அவரைக் கண்டதும் – அவரது பத்திரிகை நிர்வாகத்தில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் எழுந்து நின்றனர். என்னை இச்சம்பவமும் சங்கடத்தில் ஆழ்த்தியது. தமது ஊழியர்களைக் கண்டதும் “இங்கேயா ..... பத்திரிகையை வெளியிடப் போகிறீர்கள்?” என்று அதிகார தோரணையில் அவர் கேட்டது எனது காதுகளில் இரும்பை உருக்கி வார்த்தது போலிருந்தது. ஓ ...... இப்படியும் மனிதர்களா?

வாழ்க்கைப் பயணத்தில் – எங்கே – யாருக்கு – எவ்வாறு மரியாதை செலுத்துவது என்பது கவனத்துக்கும் எச்சரிக்கைக்கும் உரியது.

மரணவீட்டில் அஞ்சலியும் செலுத்தி, வருகின்ற பிரமுகர்களுக்கு மரியாதையும் செலுத்த வேண்டிய எழுதாத விதிப்பயன் குறித்து யோசிக்க வேண்டியுள்ளது.

❑

## *படைப்பாளிகளே !*

அயல்நாட்டுத் தமிழர்களின் கல்வி, பண்பாடு, படைப்புகள் ஆகியவற்றை ஆராய்வதற்காகவே தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ் கல்வித்துறை இயங்கி வருகிறது. எனவே உலகெங்கும் வாழும் தங்கள் படைப்புகளையும் கல்வி, பண்பாடு தொடர்பான தகவல்களையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி, தமிழ் ஆய்வு வளம்பெற உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். *– ஆசிரியர் ஞானம்*

*தகவல்களும், படைப்புகளும் அனுப்பவேண்டிய முகவரி:*

முனைவர் ஆ. கார்த்திகேயன்,
துறைத்தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

# கலைஞானம்

## —பார்வையும் பதிவும் —



**தேடலோன்**

### கலைவிழா :

புத்தளம் மாவட்ட திருமறைக் கலாமன்றம் வருடந்தோறும் நடாத்திவருகின்ற கலைவிழா அண்மையில் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திருமதி பிலேந்தியாபிள்ளை தலைமையில் கலைவிழா நிகழ்வுகள் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன. வண. பிதா நீ. மரியசேவியர் அடிகளார், வண. பிதா எஸ். செபஸ்டியான் அடிகளார் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், சிறப்பு விருந்தினர்களாக அருட்சகோதரி ஹெலன் லெம்பட், ஆர். எஸ். ஈ. புஸ்பராஜனும் கலந்து சிறப்பித்தார்கள். இக் கலைவிழாவில் பல்வகைப்பட்ட நடனங்களும் இடம்பெற்றன. குறத்தி நடனம், நவீனநடனம், சிங்கள ரஜகாலே நடனம், தீப நடனம் என்பன குறிப்பிடத்தக்கவை. அத்துடன் 'வளையாபதி' என்ற இலக்கிய நாடகமும் மேடையேற்றப்பட்டது.

### தங்கப்பதக்கம் பெற்ற நாடகம் :

ஐந்தாவது உலக சேக்கிழார் மகாநாட்டை ஒட்டி அகில இலங்கைரீதியாக அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே இந்து சமய அமைச்சும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சேர்ந்து நடாத்திய நாடகப் போட்டியில் தெய்வீக நாடகமான "திருக்குறிப்புத் தொண்டர் நாயனார்" என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இந்நாடகத்தை திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர் தயாரித்து நெறிப்படுத்த, வடகொழும்பு இந்து பரிபாலன சபையினரால் நடாத்தப்படுகின்ற அறநெறிப்பாடசாலை மாணவர்கள் நாடகத்தில் பங்கேற்று நடித்தார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

### 'சுகம் சுகமே...' :

புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் ஈழத் தமிழர்களின் படைப்பாக அண்மையில் வெளிவந்த திரைப்படம் ஜனகன் பிக்சர்ஸ் வழங்கும் ஸ்ரீ முருகனின் 'சுகம் சுகமே...' கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் திரையிடப்பட்டது. சிறப்பான காட்சியமைப்புடன் இலங்கை, இந்தியா, கனடா, ஆகிய நாடுகளில் படப்பிடிப்பு பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் நடைபெற்றுள்ளது. சிறப்பான முறையில் ஒலி, ஒளி பதிப்புகள் இடம் பெற்றுள்ளன. புலம் பெயர்ந்து வாழுகின்ற எம்மவர்களின் செயற்பாடுகள் கதைக் கருவாக அமைந்துள்ளமை படத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளது. இப்படத்தின் ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இயக்கம் ஆகிய பொறுப்புக்களை ஏற்ற ஈழத்துக் கலைஞர் திரு. ரவி அச்சுதன் அற்புதமான வகையில் செயற் பட்டுள்ளார். இத்திரைப்படத்தில் நடித்துள்ள டாக்டர் கதிர் துரைசிங்கம் அவர்களின் முயற்சியால் 'சுகம் சுகமே...' எங்கள் மனங்களில் இடம்பெற்றுள்ளது. திரு. கதிர் துரைசிங்கம் தனது உரையில் கனடாவில் 18 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 13 திரைப் படங்கள் திரையிடப்பட்டுள்ளதாகவும், திரு. ஸ்ரீ முருகன் உயிரே உயிரே, புது உறவு, சுகம் சுகமே ஆகிய மூன்று படங்களைத் தயாரித்துள்ளார் எனவும் குறிப்பிட்டார். நிகழ்ச்சியைத்

தொடக்கி வைத்து கருத்துத் தெரிவித்த எழுத்தாளர் நா. சோமகாந்தன் அவர்கள் டாக்டர் கதிர் துரைசிங்கத்தின் கலை இலக்கிய சமூக சேவைகளை பாராட்டிப் பேசினார். திரைப்பட நிறைவில் கலந்துரையாடலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ், சிங்கள குறுந் திரைப் படக்காட்சி :

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், விபவி கலாசார மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஐந்து குறுந்திரைப்படங்களின் காட்சி கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. சுமதி சிவமோகன் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட 'பிரளயம்' என்னும் தமிழ்படமும் திரையிடப்பட்டது. 'பரிவர்த்தனை' 'வாழ்க்கைச்சுற்று' ஆகிய இரு படங்களும் மாலக்க தேவப்பிரிய நெறியாள்கையின் உருவாக்கப்பட்டன. மற்றும் ஜானக்க பிரசன்னாவின் சுனில் ஒரு நடிகனா? என்று படமும், சிந்திக்க தர்மதாசா நெறியாள்கையில் வெளிவந்த 'அதன் பின்னர் எனக்கு நித்திரை வந்தது' என்ற படமும் உள்பட மொத்தம் ஐந்து படங்களுள் காட்டப்பட்டன. படக்காட்சியைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

## 'குறிஞ்சிச் சாரல்' கதம்ப நிகழ்ச்சி :

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் சங்கத்தினரால் தீபாவளி விருந்தாகக் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் தனித்துவமான விழாவாகக் 'குறிஞ்சி சாரல்' கலாசார கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. காதுக்கினிய இசையை வழங்கிய கீழைத்தேய வாத்திய சங்கமம், கண்களுக்கு விருந்தாக்கும் நடன நிகழ்ச்சிகள், பண்டைத் தமிழ் வளர்க்கும் தமிழிசை என்பன செழுமை சேர்த்தன. திரு. மா. ரூபவதனன் தயாரித்து வழங்கிய "மெல்லத் தமிழ் இனி...!" சமூகச்சித்திர நாடகமும், பாரம்பரிய கலையின் பரிமாணத்தை வெளிப்படுத்தும் "கழுகரசன் காதை" என்ற நாட்டுக்கூத்தும் இடம்பெற்றன. அத்துடன் மேலைத்தேச இசைவிருந்தும் சேர்ந்த மொத்தக் கதம்பநிகழ்ச்சி சபையோர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது. 'மெட்ரோ குறூப், இந்நிகழ்ச்சிக்கான பிரதான அனுசரணையை வழங்கியிருந்தார்கள்.

## மிருதங்க அரங்கேற்றம் :

தொழிலதிபர் திரு. திருமதி செல்வராஜ் தம்பதியினரின் புதல்வன் செல்வன் ஸ்ரீ மயூரனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. மிருதங்க வித்துவான் கலாபூஷணம் ஏ. விக்கிரமனின் மாணவரான ஸ்ரீ மயூரனின் பாட்டு பக்கவாத்தியங்கள் சகிதம் தன் அரங்கேற்ற நிகழ்வை சிறப்புடன் செய்தார். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறங்காவலர் திரு. டி. எம். சுவாமிநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## கலாலய கலைவிழா :

நிருத்திய கலாலயத்தினரின் கலைவிழா வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது. "தமிழரின் பாரம்பரியக் கலைகளில் கூத்துக் கலையும் ஒன்றாகும். நாட்டுக்கூத்து, பரத நாட்டியம், நடனம் ஆகியன கூத்திலிருந்து வந்தவையாகும். கூத்துக்குச் சொந்தக்காரர் தமிழர்களே," என்று தலைமையுரையில் திரு. அகளங்கன் தெரிவித்தார். திரு. நா. சேனாதிராசா, பிரதேச செயலாளர் செல்வி ரி. துரைசாமி, திரு. கே. ஏ. செந்தில்நாதன், மு. சபாரத்தினம், ஏ. நவரட்ணராசா ஆகிய முக்கியஸ்தர்கள் விழாவில் கலந்து சிறப்பித்தார்கள். தமிழ்நாடு அரச இசைக்கல்லூரியில் முறையாக நடனக்கலையைப் பயின்ற வவுனியாவைச் சேர்ந்த செல்வி கே. சாந்தினி தனபாலசிங்கத்தின் கலாலய மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் விழாவுக்கு மெருகூட்டின.

## "கைவிடப்பட்ட நிலம்" :

இலங்கையின் வெளியான பார்சேக்க லேண்ட் (கைவிடப்பட்ட நிலம்) எனும் திரைப்படத்திற்கு சர்வதேச அளவிலான சிறந்த திரைப்பட விருது கிடைத்துள்ளது. இலங்கையின் பிரபல திரைப்பட இயக்குநர் திரு. விமுக்தி ஜெயசுந்த ரவினால் இயக்கப்பட்ட இப்படம், பாங்கொங் நகரின் நடைபெற்ற மூன்றாவது உலகத் திரைப்பட விழாவின் போது சிறந்த திரைப் படத்துக்கான உயரிய விருதைப் பெற்றுக் கொண்டது. "எனது தாய் நாட்டிலுள்ள பலவகைப்பட்ட பிரச்சனைகளையே இப்படம் பிரதிபலிக்கின்றது" என்று கூறும் திரு. விமுக்தி ஜெய சுந்தர 28 விருதுகளைப் பெற்றுள்ளார். கேன்ஸ் திரைப்பட விழாவிலும் இத்திரைப்படம் விருதினைத் தட்டிச் சென்றுள்ளது. ❑

# வெள்ளிவிழாக் காலமிது

–ராணி சீதரன்

யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் கல்வியியற் துறை ஆரம்பித்து 25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளதை நினைவு கூரும் வகையில் நவம்பர் 5,6ம் திகதிகளில் வெள்ளி விழாவினைக் கொண்டாடியது. கைலாசபதி கல்வியற் துறையின் தலைவர் மா. சின்னத்தம்பியின் தலைமையில் விழா நிகழ்வுகள் நடைபெற்றன. 5ம் திகதி நடைபெற்ற 1ம் நாள் நிகழ்வின் போது கல்வியியற் துறைக்கு அரும் பணியாற்றிய பேராசிரியர்களின் பாராட்டு நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கல்விப்பீடத்தின் பேராசிரியர். லால் பெரேரா, பேராசிரியர் சோ. சந்திரசேகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித்துறையின் பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் பொன்னாடை போர்த்தி தமிழ் மரபின்படி தலைப்பாகை அணிவித்து பாராட்டுக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித்துறையின் சேவை அதன் வளர்ச்சி பற்றிப் பேராசிரியர்கள் பாராட்டியதோடு வாழ்த்துக்களையும் கூறினார்கள். 1ம் நாள் நிகழ்வின் நிறைவாக பட்டப் பின் கல்வி டிப்ளோமா முதுகல்விமாணி ஆகிய கற்கை நெறிகளைப் பயின்று கொண்டிருக்கும் ஆசிரிய மாணவர்களினால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன. அதில் வாசிக்கப்பட்ட கவிதையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

*... அறிவுவலு கொண்ட விரிவுரையாளருடன்*
*உறவுமுண்டு உயர்படிப்புமுண்டு*
*விடுவிப்பதற்காய் கல்வி விடுமுறையுண்டு*
*ஏதிருந்தும் என்ன பயன்?*
*காலங்கடந்து விட்ட களைப்புத் தெரிகிறது*
*ஓடும் மினிபஸ்ஸின் உள்ளே அமுக்கி*
*வெளியே தள்ளிய தலைகளாய்*
*குடும்பச் சுமைகள்*
*குழந்தை பாலுக்கு அழும்;*
*கொதிக்கும் குழம்பு அடுப்பில்*
*வேலைவிட்டு வந்தால்*
*ஆறின சோறா? ஐயோ கொடுமை*
*அலுக்கும் கணவர்*
*மாமியின் மரணம்*
*மச்சானின் திருமணம்*
*எதற்கென்று மனம்பதியும்*

*பழுவின் அழுத்தத்தைப்*
*பக்கமாய் இறக்கிவிட்டு*
*ஓடிவந்தால்*
*பஸ்ஸிற்குக் காவல்*
*மினிவானில் ஏறிவிட்டால் போதும்*
*மிதிபட்டு, நெரிபட்டு*
*தீயிட்ட மெழுகாய்*
*நோப்பட்டுப் போக*
*துச்சாதனன் உரிந்த துகிலாய்*
*தொங்கல்*
*அங்குமிங்கும் அலையும்*

*வகுப்பறையில் வந்திருந்த*
*கணப் பொழுதில்*
*விரிவுரைகள் தொடரும்*
*அழுத்தும் சுமைகள் குறைய*
*கண்கள் அயரும்*
*எழுத்தாணி எதையோ கீற*
*இடையிடையே*

*விழித்து*
*வெட்கத்தால் குனிந்து*
*இமையை மூடாது இழுப்பதற்குப்*
*பிரயத்தனப்படுவதைப்*
*பேசத்தான் முடியுமா?*

*சிட்டுக் குருவியாய் சிறகடித்த வேளை*
*பட்டப்படிப்பைத்*
*தொடர்ந்தபோது*
*எத்தனை இன்பக் கனவுகள்!*
*காலக்கழிவுகள் வேகமானதாக*
*நேரமுள்ளையும்*
*சபித்த ஞாபகம்*
*இன்றோ*
*கணங்கள் நாட்களாகிக்*
*கழியாதா வென்ற ஆக்கம்*
*வாழ்வின் சுமைகளால்*
*வந்தது இந்தச் சோகம்.*

*(குடும்பப் பெண்கள் உயர்கல்வியைத் தொடரும் போது ஏற்படும் துன்பங்களைச் சித்தரிப்பாக அமைந்த இந்தக் கவிதை வெள்ளிவிழா நிகழ்வில் ராணி சீதரனால் எழுதி வாசிக்கப்பட்டது)*

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

## கலாநிதி துரை. மனோகரன்

### காலம் மறவாப் பாடகி

ஐம்பதுகளில் திரையுலகில் புகழ்பெற்ற பாடகியாக விளங்கிய பி. லீலா அண்மையில் காலமாகியது இசையுலகுக்குப் பேரிழப்பு. சிறந்த கர்நாடக இசை அறிவும், மெல்லிசை பாடும் திறமையும் ஒருங்கே கொண்ட லீலா, மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். சற்றுக் கட்டைக்குரலைக் கொண்டவராக விளங்கினாலும், அவரது பாடல்கள் காதுக்கு இனிமையானவை. நான் பி. லீலாவின் பாடல்களையும் விரும்பிக் கேட்பது வழக்கம். எத்தகைய பாடலையும் அனாயாசமாகப் பாடக் கூடிய திறமை அவரிடம் உண்டு.

லீலாவிடம் காணப்பட்ட இசைத்திறமை ஒரு புறமிருக்க தமது இனிய குரலைப் போலவே இனிய உள்ளத்தையும் கொண்டவராக அவர் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐம்பதுகளில் திரையிசைத்துறையில் புகழ்பெற்ற மூத்த பின்னணிப்பாடகியாகத் தாம் விளங்கிய போதிலும், தமக்குப் பின்வந்து பி. சுசீலா புகழ் பெறத் தொடங்கியபோது, சிறிதும் பொறாமை கொள்ளாது, அவரது இனிய குரல்வளத்தை லீலா பாராட்டியிருந்தார். கொஞ்சும் சலங்கை என்ற திரை படத்தில் நாதஸ்வர மேதையான காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசையுடன் இணைந்து "சிங்கார வேலனே தேவா" என்ற பாடல் பாடக்கூடிய வாய்ப்பு தம்மைத் தேடி வந்த போதிலும், அப்பாடலைப் பாடுவதற்கு ஜானகியே பொருத்தமானவர் என்று தெரிவித்து அவரின் இசைத்திறமையை இனங் காட்டியவர் லீலா.



குடும்ப வாழ்வு கசந்துவிட்டபோதிலும் இசைவாழ்வு லீலாவை அதிக உயரத்துக்குக் கொண்டு சென்றது. இனிய குரலும், இனிய குணமும் கொண்ட லீலா இன்றில்லாத போதிலும், அவரது இனிய பாடல்கள் என்றும் இனியவையாக ஒலித்துக் கொண்டே இருக்கும்.

### எழுத்தை வீணாக்கும் எழுத்தாளர்

சென்ற ஞானம் இதழில் கோணேசன் என்பார் தமது அறியாமையை மேலும் புலப்படுத்தும் முறையில் வாசகர் குறிப்பு ஒன்று எழுதியிருந்தார். அவருக்கு ஈழத்து இலக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் முறையாகத் தெரியாது அல்லது மறந்து போயிருக்கலாம் என்பதைத் தப்பும் தவறுமான தகவல்களுடன் அவர் எழுதிய குறிப்பு வெளிப்படுத்தியது. அது மட்டுமன்றி, தம்மை முற்போக்காளராகக் காட்டிக்கொள்ள முயலும் கோணேசன் பண்பற்ற முறையிலும், தரமற்ற நடையிலும் தமது குறிப்பை வரைந்து, தமது பிற்போக்குத்தனத்தை ஒளிவுமறைவின்றிப் புலப்படுத்தியுள்ளார். உண்மையான முற்போக்குவாதிகள் சிலர் இலங்கையில் இருக்கின்றனர். ஆனால் கோணேசன் தம்மை ஒரு வரட்டு முற்போக்குவாதியாகவே இனங் காட்டிக் கொள்கிறார்.

என்னதான் கருத்து வேறுபாடுகள் இருப் பினும், எழுத்தில் கண்ணியம் காப்பற்றப் படவேண்டும். அவரது வார்த்தைகளிலேயே கூறுவதாயின், கோணேசன் அறியாமையின் சின்னமாகவே இன்னமும் விளங்குகிறார். எனது வாசிப்புப் பற்றிக் கோணேசனிடம் நற்சான்றிதழ் பெறவேண்டிய தேவை எதுவும் எனக்கு இல்லை. அவர் தம்மைத் தாமே புளுகிக் கொள்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், பிறர் மீது சேறு பூசும் எழுத்தைத் தமது பலம் என்று அவர் கருதுவது தான் பரிதாபமாக இருக்கிறது.

கோணேசன் புகழ்ந்துரைக்கும் கவிஞர் ஏ. இக்பாலின் இலக்கியப் பணிகளை நான் ஒரு போதும் குறை கூறவில்லை. ஆனால், கவிஞர் ஏ. இக்பாலை விடவும் சிறந்த இலக்கிய வாதிகளும், விமர்சகர்களும் இலங்கையில் இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆய்வறியும்,

தரமான இலக்கிய விமர்சன நோக்கும் இல்லாமையினாலேயே கோணேசன் இந்த அளவுக்குத் தரம் இறங்கி, இவ்வாறு தனிமனிதப் புகழ்பாடும் நிலைக்கு ஆளாகி அவஸ்தைப்படுகிறார். ஈழத்தின் ஆரோக்கியமான இலக்கியச் செல்நெறியில் ஒரு தேவையற்ற புதுப்புண் போலக் கோணேசனின் எழுத்து முயற்சி விளங்குகிறது.

## பழைய பாதையும் புதிய இராசாவும்

ஓர் ஊருக்கு ஒரு புதிய இராசா தேவைப்பட்டார். ஏற்கனவே அந்த ஊரில் இராசாக்களும், இராசாத்தியும் அரசாண்டு வந்தனர். புதிய இராசா ஒருவர் தேவைப்பட்ட போது பலர் போட்டிக்கு வந்தனர். ஆயினும், இரு வயதான இராசகுமாரர்களிடையே தான் கடும் போட்டி நிலவியது. இந்த இரு இராசகுமாரர்களும் ஏற்கனவே முதல் மந்திரிகளாக இருந்து அனுபவப்பட்டவர்கள். இவர்களுள் ஒருவர், தமக்கு முடிசூடி அரசாளும் பாக்கியம் கிடைத்தால், அந்த ஊருக்குச் சமாதானத்தைக் கொண்டு வருவதாகப் பிரகடனம் செய்தார். மற்றவர் ஊரிலுள்ள உதவாக்கரைகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு, ஒற்றைப்பாதையில் சமாதானம் கொண்டுவருவதாக ஊர் ஊராகப் பேசித்திரிந்தார்.

ஆயினும், காலப்போக்கில் முன்னைய இராசகுமாரரின் கபடத்தனம், அவரை ஆதரித்த அந்த ஊரின் சிறுபான்மை மக்களுக்குப் புரிந்து விட்டது. சமாதானம் பேசிச் சிரித்துக் கொண்டே அந்த ஊரிலுள்ள சிறுபான்மை மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சியில் அந்த இராசகுமாரர் ஈடுபட்டுவந்தமை தெட்டத் தெளிவாகி விட்டது. அந்த இராசகுமாரரின் கபடத் தனத்தைப் பெரும் வீரமாகக் கருதி, அவரின் பக்கத்தில் இருந்த ஒரு தளபதியும், சிப்பாயும் வெளிப்படையாக அந்த ஊர் மக்களுக்குத் தெரிவித்துவிட்டனர். அதுவரையில் அந்த இராச குமாரர்தான் அந்த ஊரின் சிறந்த இராசாவாக எதிர்காலத்தில் விளங்குவார் என்று நம்பியிருந்த அந்த ஊர்ச் சிறுபான்மை மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. சிரித்துப் பேசிக் கழுத்தை அறுக்கும் கபடத்தனமான இராசா வருவதைவிட எவர் வந்தாலும் பரவாயில்லை என்று கருதிய அவர்கள் இராசாப் போட்டியில் யாரையும் ஆதரிக்காமலே விட்டுவிட்டனர். அவ்வாறு அவர்கள் நடந்து கொண்டது அந்த இராச குமாரருக்கு நல்ல பாடமாக அமைந்தது. புதிய இராசாவாக வந்து, தொடர்ந்து தமது கபடத் தனத்தால் அந்த ஊர்ச் சிறுபான்மை மக்களை ஏமாற்றிப் பிழைக்கலாம் என்றும், வெளியூர்ப் படைகளைக் கொண்டு வந்து அந்த மக்களை அடக்கி ஆளலாம் எனவும் கனவு கண்ட அந்த இராசகுமாரரின் வாயில் மண்விழுந்துவிட்டது.

இதனால், சும்மா கிடந்த சங்கை ஊதி ஊரைக் கெடுத்துக் கொண்டிருந்த இராச குமாரருக்கு முடிசூடி அரசாளும் வாய்ப்புக் கிடைத்தது. புதிய இராசா தமது முடிசூட்டு விழாவின் போது அதியற்புதமாகப் பேசினார். அதைக் கேட்ட அந்த ஊர் மக்கள் எல்லோரும் "இவரல்லவோ இராசா!" என்று மகிழ்ந்து கொண்டனர். ஆனால், புதிய இராசா தமது முதல் மந்திரியாக நியமித்தவரைப் பார்த்ததும், அந்த ஊர்ச் சிறுபான்மை மக்கள் வாயடைத்துப் போய்விட்டனர். இராசா எட்டடி பாய்ந்தால், முதல் மந்திரி பதினாறடி பாய்வார். "பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை" என்ற கதைதான்.

புதிய இராசாவின் இரண்டு கரங்களையும் ஒவ்வொரு புறமாக சிவப்புச் சட்டைப் பேரினவாதிகளும், பேரினவாதக் குருக்கள் மாரும் பற்றியிருக்கின்றனர். புதிய இராசா தப்பித்தவறி ஊருக்கு ஏதாவது நல்லது செய்ய நினைத்தாலும், அவரது கரங்களை இருபுறத்திலும் பற்றிக் கொண்டிருக்கும் இந்த இரு சாராரும் அவரின் கைகளை ஒடித்துவிடுவார்கள். எப்படியாவது முடிசூடி அரசாளக் கிடைத்தால் போதும் என்று கருதி, கூடாத கூட்டங்களை எல்லாம் இராசா சேர்த்துக் கொண்டு விட்டார். இவர்களை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் இராசா தமது ஊரில் சமாதானத்தை ஏற்படுத்துவதும், நல்லாட்சியை நடத்துவதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் கடினமான காரியங்களாகவே இருக்கப் போகின்றன.

இராசாவைச் சுற்றியுள்ள கேடுகெட்ட கூட்டாளிகளுக்கு, அந்த ஊரின் சிறுபான்மை மக்களின் தலைவர்கள் சிலர் நற்சான்றிதழ்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்தக் கூட்டாளிகள்தான் இராசாவைப் பழுதாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதைச் சுயநலம் கருதிச் செயற்படும் இந்தத் தலைவர்கள் மறந்து விடுகின்றனர்.

இந்தக் கதையினால் அறியும் நீதி யாதெனில், தீயோர் சேர்க்கை தீமையே தரும் என்பதாகும்.

❑

# ஈழகாலக் கலை இலக்கிய நிகழ்வுகள்

## —பார்வையும் பதிவும் —

த. சிவசுப்பிரமணியம்

### தமிழ் இலக்கணப் பேரகராதி :

புதுச்சேரி, தொலைக் கீழைப் பிரெஞ்சு ஆராய்ச்சிப் பள்ளி நிர்வாகம் தமிழ் இலக்கணப் பேரகராதி ஒன்றினை தொகுத்து வழங்கும் வண்ணம் திரு. தி. வே. கோபாலய்யரிடம் 1979 ஆம் ஆண்டு வேண்டியிருந்தது. கடந்த 25 ஆண்டுகளாக தொல்காப்பியத்தின் பழைய உரைகள் முதல் பாவலரேறு பாலசுந்தரனாரின் தொன்மொழி இலக்கணம் முடிய உள்ள பலநூல்களைப் பயன்படுத்தியே இந்த இலக்கணப் பேரகராதியை ஆக்கியதாக கோபாலய்யர் தெளிவுபடுத்தியுள்ளார். இவ் அகராதியில் எழுத்து 2 தொகுதிகள், சொல் நாலு தொகுதிகள், பொருள் 11 தொகுதிகளென 17 தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. எளிதாகத் தமிழ் இலக்கணத்தை அறிந்துகொள்ளும் வகையில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக சபாநாயகர் காளிமுத்து அவர்கள் சென்னையில் இந்நூலை வெளியிட்டு வைத்து கோபலய்யரின் பெரும்பணியைப் பாராட்டினார்.

### "சிவத் தமிழ்ச் செல்வி" :

இந்துசமய அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில், இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட ஐந்தாவது உலக சேக்கிழார் விழாவை முன்நின்று நடாத்திய திருமதி மகேஸ்வரி வேலாயுதம் அவர்கட்கு தென்னிந்திய கோயம்புத்தூர் ஊரன் அடிகளார் "சிவத் தமிழ்ச் செல்வி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் பிறகு "சிவத் தமிழ்ச் செல்வி" என்னும் பட்டத்தை திருமதி மகேஸ்வரி வேலாயுதம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அறிவு மஞ்சரி நூல் வெளியீடு :

கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நகைச்சுவை மன்றத் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. கே. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. இ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களால் தொகுக்கப்பட்ட அறிவு மஞ்சரி நூல்வெளியீடும், அகில இலங்கை நகைச்சுவை மன்ற விழாவும் அண்மையில் நடைபெற்றது. பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி மாணவி செல்வி கவியாளி ஸ்ரீஸ்கந்தராசாவின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் செல்வி சுவேந்தி பரம்சோதியின் வரவேற்புரையைத் தொடர்ந்து பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். நூலின் அறிமுக உரையை கலாநிதி வ. மகேஸ்வரன் நிகழ்த்தினார். தொடர்ந்து நடைபெற்ற நகைச்சுவை அமர்வில் திரு. ராஜபுத்திரன் யோகராஜன், திரு. ஆ. இரகுபதி பாலசிறீதரன், திரு. பி. யோகநாதன், மற்றும் திரு. எம். எல். கிருபா ஆகியோர் நகைச்சுவை விருந்து நல்கி சபையோரை மகிழ்வித்தனர். இவ்விழாவில் யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்டு லண்டன் சிவசக்தி சிவனேசன் அவர்களால் பாடப்பட்ட கீர்த்தனைகள் அடங்கிய ஒலிநாடா அன்பளிப்பாகச் சபையோருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### புத்தகக் கண்காட்சி :

மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், மலையகக் கலை இலக்கியப் பேரவை ஆகிய மன்றங்களின் ஏற்பாட்டில் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் அண்மையில் நடைபெற்றன. கண்டி மத்திய மாகாண இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக் கண்காட்சியை மத்திய மாகாண இந்துமாமன்றத்தின் தலைவர் திரு. து. சிவசுப்பிரமணியம் திறந்துவைத்தார். இந் நிகழ்வில் கண்டி அசோகா வித்தியாலய அதிபர் செ. நடராசா அவர்களும், சமூகத் தொண்டர்களான திரு. என். எஸ். சிவானந்தன், திரு. எம். சத்திய மூர்த்தி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தார்கள். இப் புத்தகக் கண்காட்சி அட்டன் நகரசபை மண்டபத்திலும் நடத்தப்பட்டுள்ளது.

### பிரணவம் :

பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலய அதிபர் முருகையா சித்தார்த்தன் தலைமையில் 'பிரணவம்' என்ற இந்து சமய சஞ்சிகை வெளியீட்டு விழா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தை ஒட்டி சிறப்புச் சொற்பொழிவுகள், ஆய்வுரை அரங்கம் உட்பட கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### கவிதை, கட்டுரைப் போட்டிகள் :

வவுனியா வடக்கு வலையக்கல் விப் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் 'சர்வதேச சிறுவர் தினத்தை' முன்னிட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகளும், 'முதியோர் தினக்' கட்டுரைபோட்டியும் நடாத்தப் பட்டுள்ளன. மாணவர்களின் இலக்கியத்திறனை மேம்படுத்தும் நோக் குடன் நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் பல மாணவர்கள் பங்கு கொண்டு தமது ஆற்றல்களை வெளிக் கொணர்ந்தார்கள். வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்களின் வழிகாட்டலில் இப்போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### நினைவு தினச் சொற்பொழிவு :

சைவமும் தமிழும் வளர்த்த பெரியார் பண்டிதர் சைவப்புலவர் ஞானசிரோன்மணி அமரர் இ. வடிவேல் ஐயாவின் அவர்களின் ஓராண்டு நினைவை ஒட்டிய நிகழ்வு திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி– சம்பந்தர் மண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ் தான ஆதீன கர்த்தா வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் இறைவணக்கம் பாடினார்கள். வடக்கு–கிழக்கு மாகாணசபை பிரதம செயலக இணைப்புச் செயலாளர் திரு. ரி. குலவீரசிங்கம் அவர்கள் அறிமுக உரையை நிகழ்த்தினார்கள். "இன்றைய கல்விப்போக் கும் மாணவர் எதிர்காலமும்" என்ற தலைப்பில் நினைவுச் சொற்பொழிவை வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் வழங்கினார்கள். வடிவேல் ஐயா நினைவுக் குழு சார்பில் திருமதி பராசக்தி நவரத்தினம் அவர்கள் அமரரின் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்கள். நன்றியுரையை 'கற்பகம்' சிறப்பாசிரியர் திரு. த. சிவசுப்பிரமணியம் வழங்கினார்.

### சுவாமி விபுலானந்தர் நினைவு விழா :

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவுவிழா திருகோண மலை இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில் க. தங்கராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வவுனியா கல்வியல் கல்லூரி முன்னாள் பீடாதிபதி திரு. செ. அழகரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சுவாமி விபுலானந்தரின் பணிகள் பற்றி எடுத்தியம்பினார். சிறப்பு விருந்தினர்களாகச் சட்டத்தரணிகளான திரு. ஆ. ஜெகசோதி, திரு. இரா. திருக்குமரநாதன், திரு. ச. புலேந்திரன் ஆகியோரும், மல்லிகைத்தீவு க. நடேசபிள்ளை, தம்பலகாமம் க. திருச்செல்வமும் கலந்து சிறப்பித்தார்கள். பாடசாலை மாணவர்களுக்கிடையில் உரைச்சித்திரப் போட்டியும் கழகமாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நற்பணியும் மேற் கொள்ளப்பட்டது. சுவாமி விபுலானந்தர் சபையின் சார்பில் திருமதி அ. வேலாயுதம் நன்றியுரை வழங்கினார்கள்.

### கவியரசர் கண்ணதாசன் நினைவுப் பெருவிழா :

அகில இலங்கை கண்ணதாசன் மன்ற ஏற்பாட்டில் கவியரசர் கண்ணதாசனின் 24வது நினைவுப் பெருவிழா கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அரசியல் பிரமுகர்களும், கல்விசார் பிரமுகர்களும் விருந்தினர்களாக வருகைதந்து சிறப்பித்தார்கள். தமிழ்த்தாய் வாழ்த் துடன் ஆரம்பமாகிய விழாவில் அ. இ. க. மன்றத் தலைவர் கவிஞர் வேலணை வேணியன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமை உரையைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரை இடம் பெற்றது. சிறப்புரைகளை கம்ப வாரிதி திரு. இ. ஜெயராஜ், திரு. எஸ். சிவநிர்த்தானந்தா, திரு. ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினர் உரைகளைத் தொடர்ந்து நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

### "காதோடு காதாக" :

கனடாவில் வசிக்கும் பல்துறைக் கலைஞர் திரு. கதிர். துரைசிங்கம் எழுதிய சிரிப்பூட்டி சிந்திக்க வைக்கும் நகைச்சுவை நூலின் வெளியீட்டுவிழா எழுத்தாளர் திரு. என். சோமகாந்தன் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரபிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி பத்மா சோமகாந்தனின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமாகிய விழாவில் திரு. மனோ ஸ்ரீதரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். நூல்வெளியீட்டுரையை வெற்றிமணி (ஜேர்மனியிலிருந்து வெளிவரும்) யின் பிரதம ஆசிரியர் கலாநிதி மு. க. சு.சிவகுமாரன் அவர்கள் வழங்கினார்கள். கலாசூரி ஆ. சிவநேசச்செல்வன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. தேவராஜ், மன்னார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜேசுதாசன் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். நூல் ஆசிரியர் நூலின் முதற் பிரதியை தனது தாயாரிடம் வழங்கி ஆசிபெற்றுள்ளமை விசேட அம்சமாகும். திரு. திருமதி சோமகாந்தன் தம்பதியினர் 'காதோடு காதாக' ஆசிரியர் திரு. கதிர் துரைசிங்கத்திற்கும் அவரது துணைவியாருக்கும் பொன்னாடை போர்த்து மலர்மாலை அணிவித்து பரிசில் வழங்கி கௌரவித்தார்கள். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்சங்க கொழும்புக் கிளை யினர் விழாவிற்கு அனுசரணை வழங்கியிருந்தார்கள். ஏற்புரை வழங்கிய நூலாசிரியர் தன் நகைச்சுவை மூலம் சபையோர்களை மகிழ்வித்ததுடன், விழாவின் வெற்றிக்கு உழைத்த பலருக்கும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டார்.

### அகவிழி- ஒக்டோபர் 2005:

ஆசிரியத்துவ நோக்கை மையமாகக்கொண்டு வெளிவந்திருக்கின்ற இந்த இதழில் ஆக்கபூர்வமான பல பயன்மிகு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தெ. மதிசூதனன் தனது ஆரிய தலையங்கத்திலே "சிந்தனை பூர்வமான அறிவும் விமர்சன நோக்கும் தகவல் தேடல் பண்பும் கொண்டவொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாசிப்பு இயக்கம் தான் ஆசிரியர் சமூகத்தைக் விழித்தெழ வைக்கும்" இதில் பாப்பலோ நெருடா வின் கூற்றும் சேர்க்கப்பட்டுள்ளது.... "இறந்த பிறகும் என் விழிகளை மூடிவிடாதீர்கள் அவை அப்போதும் எனது மரணத்தைப் பார்க்கவும் படிக்கவும் புரிந்து கொள்ளவும் தேவைப் படலாம்" இவ்விதழில் திரு. ஏ. சி. ஜோர்ஜ், கலாநிதி செ. யோகராசா, கலாநிதி மா. கருணாநிதி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம், தமிழ் நாட்டு எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் மற்றும் பேராசிரியர் சபா. ஜெயராசா ஆகியோ ரின் ஆழமாகச் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளும் இடம்பெற்றுள் ளன.

### 'வெற்றிமணி' :

அமரர் மு. க. சுப்பிரமணியம் வாழ்ந்த காலத்தில் 1950 தொடக்கம் மாணவர்களின் நலன் கருதி ஈழத்தில் வெற்றிமணி என்னும் சஞ்சிகையை நடாத்திவந்தார். தற்பொழுது புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவரின் புதல்வர் கலாநிதி மு. க. சு. சிவகுமாரன் 'வெற்றிமணி' சஞ்சிகையை புலம் பெயர்ந்து வாழும் (ஜேர்மனி, கனடா) மக்களுக்காக வெளியிட்டு

வருகின்றார். ‘‘பாரினில் உயிர் வாழக் காற்றே நீ இலவசம், தரணியில் தமிழ் வளர வெற்றிமணி நீ இலவசம்’’ என்ற கூற்றுக்கமைய ‘வெற்றிமணி’ இலவசமாக வழங்கிவருகின்றார். அண்மைக் காலமாகத் தாயகத்திற்காக தனிமையான வெற்றிமணியையும் உருவாக்கி இலவசமாக வழங்கிவருகின்றார். என்னே! அவர் தமிழ்ப்பணி. கலாநிதி மு. க. சு. சிவகுமாரன் எழுத்தாளனாக, கவிஞராக, சித்திரம்வரைபவராக, சஞ்சிகை ஆசிரியராக ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டு வெற்றிக்கொடி காட்டி நிற்கின்றார். அதுமட்டுமல்லாமல் ‘சிவத்தமிழ்’ என்னும் ஆன்மிகக் காலாண்டு இதழையும் வெளியிட்டு சமயப்பணியும் செய்து வருகின்றார். மேலும் பதின்மூன்றுக்கு மேற்பட்ட நூல்களை வெற்றிமணி வெளியீடாக வெளிக்கொணர்ந்துள்ளார். அதில் நிலாமகள் என்ற புனைபெயரில் அவர் எழுதிய ‘தமிழே காதல்’ என்னும் கவிதை நூலும், கனடா கதிர். துரைசிங்கம் எழுதிய ‘காதோடு காதாக’ என்ற நகைச்சுவை நூலும் அடங்கம். கலாநிதி மு. க. சு. சிவகுமாரனின் தமிழ்ப்பணி தொடர ‘ஞானம்’ வாழ்த்தி நிற்கிறது.

## நூல் வெளியீடுகள் :

- ‘மழலைப் பூங்கா’ : நூல் வெளியீட்டு விழா அண்மையில் காவத்தை நீலகம தமிழ் வித்தியாலய (ஆரம்பபிரிவு மாணவரின் சுய ஆக்கத்தினை தாங்கிய படைப்புகளுடன்) மண்டபத்தில் அதிபர் திரு. ஜெயா ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண சபையின் பிரதித்தலைவர் திரு. ஏ. எம். டி. இராஜன் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.
- ‘பூ மழை’ : தீவக மறுமலர்ச்சி மையத்தின் ஆதரவில், கனடாவில் வதியும் கவிஞர் அனலை அறு இராசேந்திரத்தின் கவிதை அறிமுகவிழா பாரிஸ் நகரில் பாப்பலோ நெருடா மண்டபத்தில் நடைபெற்றது. டாக்டர் வி. ரி. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற ‘பூ மழை’ அறிமுக விழாவில் சிறப்புரை ஆற்றிய திரு. சி. காராளபிள்ளை புலம்பெயர் தமிழர் மத்தியில் கனமான படைப்புக்கள் அரிதாகவே காணப்படுகின்றன என்று தெரிவித்தார். மூத்த பத்திரிகையாளர் எஸ். கே. காசிலிங்கம் நூலை வெளியிட்டுவைக்க கலைஞர் எஸ். யேசுரட்ணம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.
- இளையகவி பெ. லோகேஸ்வரன் எழுதிய ‘‘என் இனிய இவளுக்கு’’ என்ற நூலின் வெளியீட்டு விழா மஸ்கேலியா சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் திரு. டி. சச்சிதானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள். திரு. ஆர். இராஜேந்திரன், தமிழ்மணி தங்கம், எஸ். துரைச்சாமி, சி. டி. பெருமாள் ஆகியோர் விசேட அதிதிகளாகப் பங்கு கொள்ள செனன் தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. சி. சிவலிங்கம் நூல் விமர்சனம் செய்தார்கள். இந்நூல் வெளியீட்டு விழாவுடன் மஸ்கேலியா ‘தமிழ் சங்கத்தின்’ அங்குரார்ப்பண வைபவமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
- யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவன் பெ. சிறி. கந்தநேசன் எழுதிய ‘செழிப்பைத் தேடும் பறவைகள்’ என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. திரு. த. விக்கினேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார். துணைவேந்தர் பேராசிரியர் க. மோகனதாஸ், கலைப்பீடாதிபதி திரு. இரா. சிவச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா வெளியீட்டுரையையும், தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. இ. குமரன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினார்.

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் கதைநூல் :

கொக்குவில் இந்துக்கல்லூரியின் கொழும்புக் கிளை பழைய மாணவர்கள் சங்கத்தின் 60 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ‘கொக்குவில் இந்துக் கல்லூரியின் கதை நூல்’ வெளியிட்டு வைக்கப்பட்டது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு கிளைத் தலைவர் திரு. கே. கேதீஸ்வரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். பிரதம அதிதியாகக் கலந்து

கொண்ட முன்னாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கமும் சிறப்பு அதிதியாக வரவழைக்கப்பட்ட முன்னாள் அதிபர் திரு. பி. கமலநாதனும் கல்லூரியின் வளர்ச்சிபற்றி எடுத்துக் கூறினார்கள். நூலின் வெளியீட்டு ரையை நாடறிந்த விமர்சகர் திரு. கே. எஸ். சிவகுமாரன் வழங்கினார். சிங்களப் பெண் கலைஞர்களின் ஐந்து வகையான நடன நிகழ்ச்சிகளும் இடையிடையே நடாத்தப்பட்டன. கொக்குவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு 33 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய முன்னாள் அதிபர் திரு. ஆர். மகேந்திரன் தம்பதிகள் கௌரவிக்கப்பட்டனர். நூலின் முதற் பிரதியை மயூராபதி தேவஸ்தான அறங்காவலர் வல்லிபுரம் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். சங்கச் செயலாளர் திரு. ஏ. பற்குணன் நன்றியுரை வழங்கினார்கள்.

## நலமாக வாழ நாற்பது வழிகள் :

உளவளத் துணையாளர் திரு. கா. வைத்தீஸ்வரன் எழுதிய 'நலமாக வாழ நாற்பது வழிகள்' என்னும் நூலின் வெளியீட்டுவிழா கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் டாக்டர். வி. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பேராசிரியர் சிவகுருநாதன் சிவயோகன் கலந்து சிறப்பித்தார்கள். தமிழ் மொழிவாழ்த்தை நூலாசிரியரின் பேரப்பிள்ளைகளான செல்வி ந. காயத்திரி, செல்வன் ந. சிறிராம் ஆகியோர் இசைத்தனர். வரவேற் புரையை திரு. ஆ. கந்தசாமி வழங்கி நிற்க வாழ்த்துரையை திரு. பெ. விஜயரத்தினம் வழங்கினார். நூலின் வெளியீட்டுரையை திரு. சோ. தேவராசா ஆற்றினார். நூல் ஆய்வுரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. குமாரசாமி சோமசுந்தரத்தினால் வழங்கப்பட்டது. நூல் விமர்சனங்களை பேராசிரியர் எஸ். ஜே. யோகராஜன் அவர்களும் கலாநிதி வ. மகேஸ்வரன் அவர்களும் பல்துறைசார் பரிமாணங்களுடன் விளக்கினார்கள். நூலின் முதற்பிரதியை திருமதி சிவகாமி சௌந்தரி விஜயரத்தினம் அவர்கள் பெற்றுச் சிறப்பித்தார்கள். காலையில் நடந்த நிகழ்வாக இருந்தபோதிலும் மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் விழாவுக்கு சிறப்புச் சேர்த்தமை முக்கிய அம்சமாகும்.

## நினைவுப் பேருரை :

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் பேரறிஞர் சங்கப்புரவலர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களது 'நினைவுப் பேருரை' நடைபெற்றது. இவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 1950 ஆம் ஆண்டு ஆயுள் உறுப்புரிமையைப் பெற்றார். 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 ஆம் ஆண்டுவரை துணைத்தலைவராகவும் 1980 தொடக்கம் 1983 வரை தலைவராகவும் பணியாற்றினார். அதன்பின் காப்பாளர்களில் ஒருவராக இருந்து பல்வேறுபட்ட இலக்கியப் பணிகளை மேற்கொண்டார். அவருடைய நினைவாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் 'நினைவுப் பேருரை' ஒன்றை ஒழுங்குசெய்து இந்தியாவின் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர் க. இராஜனை அழைத்திருந்தது. 'சங்க இலக்கியமும் அகழாய்வும்' என்னும் பொருளில் பேராசிரியர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். சங்கப்புரவர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் அவருடைய பிள்ளைகள் கொழும்புத் தமிழ்சங்கத்திற்கு ஒரு மண்டபத்தையும், நூல் நிலையத்திற்கான கட்டிடத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளனர். கொழும்புத் தமிழ் சங்கம் என்றும் மறக்கமுடியாத பெரியாராக அவர் இருப்பார் என்னும் மகுடம் சூட்டப்பட்டுள்ளதை தமிழ் நெஞ்சங்கள் நன்கறியும்.

## நாடக விழா - 2005 :

றோயல் கல்லூரி தமிழ் நாடகமன்றம் நாடகக்கலைக்கு மகுடம் சூட்டுமுகமாக பெருமை யுடன் வழங்கிய நாடகவிழா நவரங்கஹல மண்டபத்தில் இனிதே அரங்கேறியது. பிரதம விருந்தினராக மூத்த நாடகக் கலைஞர் டாக்டர் மரிக்கார் எஸ். ராமதாஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினராக றோயல் கல்லூரி அதிபர் திரு. எச். ஏ. உபாலிகுணசேகர கலந்து மாணவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். இந் நிகழ்வில் நாடகங்களுடன் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

❑







நூல் : மலைச் சுவடுகள் [கவிதைத் தொகுதி]
ஆசிரியர் : கவிஞர் மாரிமுத்து சிவகுமார்
வெளியீடு : வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம் (தனியார்) கம்பனி- உடத்தலவின்னை
விலை : ரூ 120/=

'மலைச் சுவடுகள்' என்ற இந்தக் கவிதை நூல் சிந்தனை வட்டத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. "கவிஞர் மாரிமுத்து சிவகுமாரின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவென்றாலும் அவரின் கவிதைகளில் முதிர்ச்சித் தன்மையினைக் காணமுடிகின்றது. சமூக அவலங்களையும் மூடநம்பிக்கைகளையும் ஒரு தேர்ச்சி பெற்ற திரைப்பட இயக்குநரைப் போல கவிதைவடிவில் படம்பிடித்துக் காட்டுவதில் வெற்றி பெற்றுள்ளார்." என்று கலாபூஷணம் பீ. எம். புண்ணியாமீன் தனது பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

மலையகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கவிஞர் மாரிமுத்து சிவகுமார் தான் வாழும் மலையக மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் துன்ப துயரங்களையும் வெளிக் கொணரவேண்டும் என்ற உத்வேகத்தில் தமது படைப்புகளை 'மலைச் சுவடுகள்' வாயிலாக எம்மைத் தரிசிக்க வைத்துள்ளார். மேலும் இவரது கவிதைகளில் சமூகப் பார்வையும், இன மொழி மத வேறுபாடற்ற மானிட நேயமும் இழையோடி நிற்பதை அவதானிக்கலாம். இக் கவிஞரது படைப்புகள் வீரகேசரி, மித்திரன், அமுது, தினக்குரல், ரோஜா, தினகரன், தமிழ் ஏடு, மலைக்குரல், கங்கை ஆகியவற்றில் வெளி வந்தவையே நூலுருப் பெற்றுள்ளன. வீர கேசரியும், மித்திரனுமே இவரது பல ஆக்கங் களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

"நாற் சுவர்களின் உட்புறத்துள் மட்டுமே எங்களுடைய சப்தங்கள் ஒலிக்க கேட்க முடிகிறது. எண் திசையிலும் எம் சகோதரர்கள் பரந்திருந்தும் ஏனிந்த அடிமைப் புதைப்புக்குள் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்வதற்காக மட்டுமே தான் எங்களுக்கான மொழி படைக்கப் பட்டதா? இல்லை "மௌன மொழி" ஒன்றை எங்களுடைய குரலோசை வரைவிலக்கணப் படுத்துகிறதா? எவ்வளவுதான் வீரிட்டு கத்தி கதறினாலும் எங்களது துன்பங்கள் எங்களை விட்டு விலகுவதில்லையே ஏன்?.... இதுதான் நாம் வாங்கிவந்த வரமா?" என்று தன் இதய தாகங்களை அம்பலப்படுத்தும் நூல் ஆசிரியர் அவற்றை தன் கவிதைகள் மூலம் வெளிப் படுத்தி நிற்கிறார். 'உழைத்தும் நமக்கு வாழ்வில்லை' என்ற கவிதையில் உழைக்கும் வர்க்கத்தின் இன்னல்களை எடுத்தியம்புகிறார்.

"சிந்தும் வியர்வைக்கு ஈரமில்லை
சிறைகளில் வாழ்வதில் உரமில்லை
உழைப்பிற்காய் வருகின்ற ஊதியமும்
ஊக்கமாய் எங்களையும் சாய்வதில்லை"

67 கவிதைகளை உள்ளடக்கிய இத் தொகுதியில் 'மலைச் சுவடுகள்', 'யுத்தத்தைப் புதைப்போம்', 'சொந்த மண்ணை விட்டு' 'உழைத்தும் நமக்கு வாழ்வில்லை' 'காணி நிலம் வேண்டும்', 'சமாதான தீபம் சுடர் விடுமா?', 'உழைக்கும் கரங்கள்', 'புது காவியம்' ஆகிய கவிதைகள் மனத்தை ஊடறுத்து நின்று உலா வருகின்றன, இளம் எழுத்தாளர் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான கவிதை ஆக்கங்களை வீறு நடையுடம் படைக்க வேண்டுமென எதிர்பார்க் கின்றோம்.

- சி. அருந்தவன்




நூல் : சூழலைப் பாடுவோம்
ஆண்டு - 03
ஆசிரியர் : பி. பி. அந்தோனிப்பிள்ளை
வெளியீடு : ஜே. என். டீ. கிறீஸ் அச்சகம்
79,2 A, ஆனந்த மாவத்தை,
மதகொட வீதி, வத்தளை.

இன்றைய காலகட்டத்தில் சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதில் ஒரு சிலராவது ஆர்வம் காட்டி வருவது ஆரோக்கியமான செயற்பாடாகும். வேற்று மொழிகளில் சிறுவர் களுக்கான இலக்கியங்கள் இருக்கும் அளவுக் குத் தமிழ் மொழியில் குறைவாகவே இருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அந்தவகையில் திரு. அந்தோனிப் பிள்ளையவர்கள் ஆண்டு – 03 சிறுவர்களுக் காக 'சூழலைப் பாடுவோம்' என்ற கவிதை நூலைத் தந்துள்ளமை வரவேற்கத்தக்க பணியா கும். இந்நூலில் 25 கவிதைகள் இடம்பெற்றுள் ளன.

"சிறு வயதில் இசையோடு பாடும் பாடல்கள் மனத்தில் நிரந்தரமாகப் பதிந்து விடுவது எல்லோரும் அனுபவத்தில் கண்ட உண்மை. இன்றைய ஒன்றிணைந்த பாடக் கற்பித்தல் முறையிலே சுற்றாடல் சுகாதாரம் ஆரம்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் அடிப்படை விடயங்களைத் தலைப்புக்களாகக் கொண்டு சிறுவர்களுக்கேற்ற பாடல்களை ஆக்கி இலகுவான மெட்டமைத்து இசையோடு பாடப் பயிற்சி கொடுப்பதால் மேற்படி துறைகள் சார்ந்த விடயங்களை மாணவர் இலகுவில் தெரிந்து கொள்வர். மேலதிகமான விடயங்க ளையும் ஆசிரியர், மாணவர் அறிந்து கொள்ள வழிகாட்ட வேண்டும். இம்முறையில் மாணவரின் மொழித்திறன் இசைத்திறன் ஆகியனவும் விருத்தியடையும்" என்று நூல் ஆசிரியர் தனது முகவுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிறிய வயதினரின் மனத்திலே நல்ல விதைகளை விதைத்து வேரூன்றப் பண்ண வேண்டும் என்ற நோக்கில் நூல் ஆசிரியர் செயற்பட்டுள்ளதை அவர்களுடைய கவிதைகள் (பாடல்கள்) புலப்படுத்தி நிற்கின்றன. எடுத்துக் காட்டாக 'ஒற்றுமை பேணுவோம்', 'சுக வாழ்வு', 'தகவல் தொடர்பு', 'கணனி', 'உணவில் சத்து', 'மின்சக்தி', 'வானொலி', 'தொலைக்காட்சி' ஆகிய விடயங்களை இளவயதிலேயே மனதில் பதியும் வகையிலும் மிக எளிதாக அறிந்து கொள்ளும் வகையிலும் சிறிய பாடல்களாகத் தந்துள்ளார். கடைசிப் பாடலில் 'ஆசிரியர்' மாணவர்களுக்கு எப்படி உதவியாக இருப்பார் என்ற கருத்துப்பட கூறிய விடயங்கள் மனங் கொள்ளத்தக்கன.

சிறுவர்களுக்கு மேலும் பயன்தரும் சிறுவர் பாடல் ஆக்கங்களை திரு. அந்தோனிப் பிள்ளை தொடர்ந்தும் வெளியிட்டு மாணவர் உலகிற்கு வழங்கவேண்டுமென்று எதிர்பார்க் கின்றோம்.

**- யேசுதாசன்**



நூல் : புலோலியூர் ஆ. இரத்தின வேலோன் சிறுகதைகள் ஆய்வு நூல்
ஆசிரியர் : ம. திருமகள்
வெளியீடு : மீராபதிப்பகம்
விலை : ரூ 180/=

தமிழ் சிறப்புக்கலைமாமணிப் பரீட் சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆய்வுக் கட்டுரைக்காக புலோலியூர் இரத்தினவேலோன் சிறுகதைகளை ஆய்வுக்கு உட்படுத்தியிருக் கிறார் திருமகள். அவ்வாய்வுக்கட்டுரையே மீரா பதிப்பகத்தின் 50 ஆவது வெளியீடாக

நூலுருவாகியிருக்கிறது. இந்நூலானது ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் இயலிலே ஈழத்துச் சிறுகதை இலக்கியம் பற்றிய அறிமுகம். அடுத்த இயலில் இரத்தினவேலோன் பற்றிய அறிமுகம் எனத் தொடர்ந்து, பின் சிறுகதையின் உள்ளடக்கம் பற்றி ஒரு இயலும், சிறுகதையின் உருவம் பற்றி இன்னோர் இயலும் பேசுகின்றன. இறுதியில் மொத்தமாய் ஆய்வுக்கெடுக்கப்பட்ட சிறுகதைகள் மதிப்பிடப் படுகின்றன.

இந்நூலில் புலோலியூர் இரத்தின வேலோனின் சிறுகதைத் தொகுதிகளான 'நிலாக்காலம்', 'விடியட்டும் பார்ப்போம்', 'புதிய பயணம்' ஆகியவற்றிலுள்ள இருபத்தேழு சிறு கதைகளைத் தெரிந்தெடுத்திருக்கிறார் திருமகள். சிறுகதைகள் மட்டுமன்றி இரத்தின வேலோனின் பிறப்பு, வளர்ப்பு, கல்விச்சூழல், அவர் எதிர்நோக்கிய சிக்கல்கள் பிரச்சினைகள் அவரது இலக்கியப் பிரவேசம் என்பன பற்றியும், விரிவாக வழங்கியிருக்கிறார் நூலாசிரியர். வழமையாக எழுத்தாளர்களின் முகங்கள் அவர்களது படைப்புக்களுள் எட்டிப் பார்க்கும் தருணங்களில் மட்டுமே, வாசகர்களால் தரிசிக்க முடிகின்ற போதிலும், இவ்வாறான ஆய்வுகளின் போது, அவர்களின் முகங்களை நேரிடையாகக் காண முடிகிறதுண்டு. அவ்வாறான ஒரு சந்தர்ப்பமாக இந்நூலில் இரத்தினவேலோனின் முகத்தைக் காணக் கிடைக்கிறதோடு, அவரது குரலும் எமக்குத் துல்லியமாகக் கேட்கிறது. அவரது இளமைக் காலம் பற்றியும், அவரை இலக்கியத் துறையில் வளர்த்தெடுத்தவர்கள் பற்றியும் நன்கு அறிய முடிகிறது. மேலும் அவர் மனதிலிருந்த கலைத் தேடலுக்கும், அவர் கல்வி கற்ற துறைக்குமிருந்த பெரும் இடைவெளியை அவரது உணர்வு மூலமாகவே உணரமுடிகிறது. இவ்வகையில் புலோலியூர் இரத்தினவேலோனின் முகத்தை சரியாக வாசகர்களுக்கு இனங்காட்டியிருக் கிறார் திருமகள்.

மேலும், கதாசிரியரின் கதைகளை ஆண், பெண் உறவு நிலைகளைப் பிரதிபலிப்பன வாகவும், இனப்பிரச்சினை சார்ந்தனவாகவும், சீதனப்பிரச்சினையை மையப்படுத்தியவை யாகவும், சமூகப்பிரச்சனைகளை வெளிப்படுத் துபவை ஆகவும், சாதியம் பற்றிப் பேசுபவை ஆகவும் வேறு பிரித்துக் காட்டுகிறார் ஆய்வாளர். அவ்வாறான கதைகளின் வீரியமிக்க உரையாடல்களையும், மறைந்தும், மறையாத கிராமப்புறப் பேச்சு வழக்கையும் தொட்டுக்காட்டி அச் சிறுகதைகளை வாசகர்களுக்கு அடையாளம் காட்டுகிறார். கதைகள் முடியும் தறுவாயில் முத்தாய்ப்பாக எழுதப்படுகின்ற உச்சமான வார்த்தைகளையும் எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறான வேறுபடுத்தல்களும், விமர்சனங்களும் நல்ல கதைகளை வாசகனுக்கு இனங்காட்டி, இச்சிறு கதைகளைப் பற்றி எதுவுமே அறியாதவர்களைக் கூடத் தூண்டி இழுத்து வாசிக்கவைப்பவையாய் அமைந்துள்ளன. இவ்வகையில் நிலாக்காலம், வேட்டை, விடியலுக்கு முன், வடுக்கள் போன்ற கதைகள் உச்ச பலனைத் தந்த கதைகள் என வாசகர்களுக்கு இனங் காட்டுகிறார் திருமகள்.

சிறுகதைகளின் உள்ளடக்கம் பற்றி ஆய்வு செய்ததற்கும் மேலாக சிறுகதைகளின் உருவ அமைப்பு, பாத்திரப்படைப்பு போன்றவையும் ஆராயப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சிறுகதைகளில் கதாசிரியரே பாத்திரமாகி விடுவதை ஆய்வாளர் சுட்டிக்காட்டுகிறார். அதேபோல கதைமாந்தர்கள் அனைவரும் மத்தியதரவர்க்கம் சார்ந்து இருப்பவர்களாகவும், சமூகத்தின் அம்சமாகத் திகழ்பவர்களாகவும் இருப்பதனையும் சுட்டிக் காட்டும் திருமகள் பெண்பாத்திரங்கள் அனைத்தும் சொந்த முகங் களுடனேயே வருவதை ஒத்துக் கொள்கிறார்.

ஓவியத்துக்கு வண்ணங்கள் போல, இலக்கியத்துக்கு மொழிதான் என்று சொல்லும் திருமகள் இந்த மொழி புலோலியூர் இரத்தினவேலோன் கதைகளில் சிறப்பாகக் கையாளப்பட்டதை வியக்கிறார்.

மேலும் இவ்வாறான பல கதைகளை சிறப்பாக ஆய்வு செய்திருக்கிறார் திருமகள். ஆயினும் சில கூற்றுக்களையும், வாக்கியங் களையும் திரும்பத் திரும்ப ஒரேமாதிரி விமர்சித்திருக்கிறாரோ என்றுபடுகிறது. எனினும், இவ்விருபத்தேழு கதைகளையும் விடாமல் ஆராய்ந்து அதன் நிறைகுறைகளைத் தொகுத்து நூலாக்கித் தந்திருக்கும் திருமகளின் முயற்சி பாராட்டிற்குரியது.

– தாட்சாயணி




நூல் : சிரட்டையும் மண்ணும் (கவிதைத் தொகுதி)
ஆசிரியர் : நாச்சியாதீவு பர்வீன்
வெளியீடு : சமூக அபிவிருத்தி அமைப்பு 87,24, தர்மபால மாவத்தை, அநுராதபுரம்.
விலை : ரூபா 75/=

*"சிரட்டையும் மண்ணும்*
*பர்வீனின் படைப்பு*
*நண்பர்களின் ஊக்கத்தால்*
*இன்று நூலாகின்றது."*

என்று அன்பு ஜவஹர்ஷா ஒளிக்கீற்றாக வெளிக்காட்டுகின்றார். 1972 ஆம் ஆண்டு நான் அனுராதபுரத்தில் இருந்தபோது 'கலைக்கோலம்' என்ற கவிதைத் தொகுப்பில் அன்பு ஜவஹர்ஷாவும் நானும் எழுதிய கவிதைகள் இடம்பெற்றிருந்தன. அன்று தொடக்கம் அன்பு ஜவஹர்ஷா இலக்கியப்பணி ஆற்றிவருகின்றார். அவருடைய வரிகள் பர்வீனின் கவிதை நூலுக்கு அணி சேர்த்துள்ளன.

*தூண்டில்கள் .......*
*பெரிதா ...... சிறிதா .......*
*பர்வீன் பார்க்கவில்லை*
*பாதச் சுவடுகள்*
*ஆழமாக இருப்பது*
*எமக்குப் புரிகின்றது.*

என்று வெளிப்படுத்தியுள்ளார்.

'சிரட்டையும் மண்ணும்' என்ற இந்தக் கவிதைத் தொகுதியில் 38 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சின்னச் சின்ன ஆசை தொடக்கம், சிரட்டையும் மண்ணும் வரை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஏற்கனவே பிரசுரமாகிய பல கவிதைகள் இக் கவிதை நூலில் இடம்பிடித்துள்ளன. இடி, படிகள், யாத்ரா, நவமணி, வீரகேசரி, மித்திரன், தினகரன், மல்லிகை, அநு – ராகம், நாச்சிய தீபம், எங்கள் தேசம் ஆகியவற்றில் இவர் (பர்வீன்) ஆக்கிய படைப்புகள் வெளிவந்துள்ளன.

இலக்கியமும், படைப்புக்களும் சமூகம் சார்ந்த நுண்ணிய உணர்வுகளைச் சொல்ல வல்ல சிறந்த தளமாகும். வாழ்வியல் பதிவுகளை கூறக்கூடிய மிகச் சிறந்த ஆவணமாக இப்படைப்பிலக்கியங்கள் விளங்குகின்றன என்று எம். ஏ. எம். டில்ஷான் இந்நூலில் மனந்திறந்து கூறுகின்றார். நாச்சியாதீவு பர்வீன் கவிதைகள் கலையம்சம் கொண்ட படைப்புகளாக இருப்பதுடன், வாசகர்களைச் சிந்திக்கவைக்கும் திறனும் கொண்டவைகளாக அமைந்துள்ளன.

*"எல்லாப் பாரங்களையும்*
*என் மீது சுமத்திவிட்டு*
*நீ தப்பிக் கொள்கின்றாய்*
*மௌனமாய்*
*உருகும் ஒரு தீப்பாறையாய்*
*என் மனம்*
*கொந்தளிப்பது*
*உனக்கெங்கே தெரியும்?"*

எதிர்பார்ப்புகள் என்ற கவிதையிலே தன் உள்ளக்குமுறலை ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார்.

'ஞாபகங்கள்' என்ற கவிதையிலே ........

*"உயிரின் ஆழத்தில்*
*நினைவின் முடிச்சுக்களாய்*
*உறைந்து கிடப்பவைதான்*
*நிஜமான ஞாபகங்கள்."*

என்று கூறிய ஞாபகம் அவரைத் தொட்டு நிற்பதாகத் தெரிகின்றது. மேலும் 'இலக்கியக் குரல்' மூலம் மேமன்கவி எழுத்தாளரின் பின் புலத்தை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். நாச்சியாதீவு பர்வீனின் இலக்கியப் பணி தொடரவேண்டுமென்று வாழ்த்துகின்றோம். -

தம்பு - சிவா



நூல் : நிறங்கள்
(சிறுகதைத் தொகுதி 1)
ஆசிரியர் : இணுவில் உத்திரன்
வெளியீடு : இணுவில் பொதுநூலக இலக்கிய மன்றம்
விலை : ரூ 149/=

'இணுவையூர் உத்திரன்' என்ற புனை பெயரில் தடம்பதித்துள்ள திரு. சுப்பையா பரமேஸ்வரன் இணுவில் பொது நூலகத்தின் அனுசரணையுடன் இச் சிறுகதை நூலை இணுவிலிலேயே கணனி வடிவமைப்புச் செய்து, அச்சுப்பதிப்பித்து இணுவில் மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். நிறங்களின் அட்டைப் படம் நிறங்களாகவே மிளிர்கின்றன. கதைகளில் வரும் ஓவியங்களும் இம் மண்ணின் மைந்தர் களே வரைந்துள்ளார்கள் என்று பார்க்கும் போது மனம் மகிழ்ச்சி கொள்கின்றது.

"இந்த நூற்றாண்டின் சிறுகதை இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவராக மிளிர்பவரே இணுவையூரைச் சேர்ந்த உத்திரன். இளமை முதற் கொண்டு கதை, கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் உடையவர். கல்வி கற்கும் காலத்தில் சிறுகதைப் போட்டிகள் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி பலரது பாராட்டுகளைப் பெற்றதோடு பரிசில்களும் பெற்றுள்ளார்" என்று பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை அவர்கள் தமது வெளியீட்டுரையில் இயம்பி யுள்ளார்கள்.

கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக 'சிறுகதை' எழுதிவரும் இவரது படைப்புக்கள் வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, சுடர்ஒளி, மித்திரன், சங்குநாதம், உதயன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

"எனது சிறுகதைகள் இந்தச் சமுதாயத் திலிருந்து எழுந்தவை. இந்தச் சமுதாயத்தைச் சொல்பவை. நானும் இச் சமுதாயத்தில் ஒருவன்" என்று என்னுரையில் தெளிவு படுத்தும் உத்திரன் தனது 'நிறங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பில், தன் சமூதாயப் பார்வையுடன் முப்பது சிறுகதைகளை எமக்குத் தந்துள்ளார்.

"உயிரோட்டமுள்ள வாழ்க்கைத் தரிசன மாக உத்திரனின் சிறுகதைகள் பல அமைவதைப் பார்க்கிறேன். மனித உணர்வின் ஆழ்ந்த மீட்டலாகச் சில கதைகள் அமைகின்றன." என்று இந்நூலின் வாழ்த்துரையில் திருமதி கோகிலா மகேந்திரன் குறிப்பிடுகின்றார். செங்கை ஆழியானின் அணிந்துரையும் இந் நூலுக்கு அணிசேர்த்துள்ளது.

'இவர்கள் பயங்கரவாதிகளா?' என்ற இவரின் போர்க்காலக்கதை நெஞ்சை நெருட வைக்கிறது. 'மீண்டும் தொடரும் மிடுக்கு' என்ற கதைமூலம் சாதாரண பெண்ணின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களைச் சித்தரித்துக் காட்டப் படுகின்றது. 'உயிரோடு கலந்த மண்' உருக வைக்கின்றது. 'பாதை தவறிய கால்கள்' இலட்சியம் தவறிய மனித ஜென்மங்களின் ஊசலாட்டம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 'இராமரைத் தேடும் சீதைகள்' இன்றும் இருக் கின்றார்களா? என்று கேட்கத் தூண்டுகின்றது. 'தொழிலாளர் தினம்' ஏழைத் தொழிலாளிகளை சுரண்டிவாழும் முதலாளி வர்க்கத்திற்கு கொடுத்த அடி. 'கனடா மாப்பிள்ளை' சமுதா யத்தை சிந்திக்க வைத்துள்ளது. 'விடியலைத் தேடி' காதல் தேசத்து எழுதப்படாத சட்டங்களை எழுதிய ஆசிரியர் "போராளிகள் உருவாகு வதில்லை; உருவாக்கப் படுகின்றார்கள்" என்று கூறி முடிக்கிறார். "எங்கள் விருப்பங்கள் எல்லாம் எங்கள் கிராமங்கள் மறுமலர்ச்சி பெறவேண்டும். எங்கள் மண்ணின் மைந்தர்கள் மாண்புற வேண்டும். எங்கள் கிராமங்கள் தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்." கடைசிக் கதையில் ஆசிரியரே தன் ஆதங்கத்தை தெளிவுபடுத் தியுள்ளார்.

பல நல்ல சிறுகதைகளைத் தந்துள்ள உத்திரன் மேலும் தன் எழுத்துக்கள் மூலம் அணி சேர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

- இணுவையூர் வசந்தன்.



நூல் : ஈழத்து இலக்கிய தரிசனம்
ஆசிரியர் : கலாநிதி துரை மனோகரன்
முதற்பதிப்பு : டிசம்பர் 2004
விலை : ரூபா 200/=

இந்நூலின் முதற் கட்டுரை ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒரு பொதுப்பார்வை என்பதாக அமைந்துள்ளது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய பொதுநோக்கொன்றை இக்கட்டுரை வழங்கும் என எதிர்பார்க்கலாம். யாழ்ப்பாண மன்னர் காலத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய அரசகேசரியின் இரகுவம்மிசம் பற்றியதாக ஒரு கட்டுரை விளங்குகிறது. அரசகேசரி தமது நூலுக்கு இரகுவம்மிசம் என்ற பெயரையே பயன்படுத்தியுள்ளமையால், இக்கட்டுரையிலும் அதே பெயரே பயன்படுத்தப்பட்டுள்ளது. பள்ளு இலக்கிய வளர்ச்சியில் ஈழமும் தனது பங்களிப்பைச் செய்துள்ளது. இவ்வகையில், யாழ்ப்பாண மன்னர் காலம் முதல் ஒல்லாந்தர் காலம் வரை ஈழத்தில் தோன்றிய நான்கு பள்ளு நூல்கள் பற்றி ஈழத்தில் பள்ளு நூல்கள் என்னும் கட்டுரை எடுத்தியம்புகின்றது. பதினேழாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய காதல் இலக்கியம் தொடர்பானதாக வெருகல் சித்திரவேலாயுதர் பற்றிய பதினேழாம் நூற்றாண்டு இலக்கியம் என்ற கட்டுரை விளங்குகின்றது. ஒல்லாந்தர் காலத்தின் சிறந்த இலக்கியவாதிகளுள் ஒருவராக விளங்கியவர் வரதபண்டிதர். அவரது இலக்கிய, சமய சம்பந்தமான நூல்களை நோக்குவதாக இந்நூலில் ஒரு கட்டுரை இடம்பெறுகின்றது. ஈழத்தில் தனித்துவமான தூது இலக்கியங்கள் சில தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று இணுவை சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய பஞ்சவன்னத்தூது என்பதாகும். இவ்விலக்கியம் பற்றிய கட்டுரையும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர் ஆகியோர் பற்றியதாக இரு பெரும் புலவர்கள் என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவரான சம்பந்தனின் சிறுகதைகள் பற்றிய ஒரு கட்டுரையும் மலையகத்தின் இரு சிறுகதைகள் என்ற கட்டுரையும் நூலில் இடம்பெறுகின்றன.

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் யாழ்ப்பாண மன்னர் காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான சில ஈழத்து இலக்கியங்கள் பற்றிய பார்வைகளாக அமைந்துள்ளன. ஈழத்து இலக்கியம் பற்றிய ஒரு வெட்டுமுகத்தோற்றத்தை இந்நூல் வாசகருக்கு அளிக்கும் என எதிர்பார்க்கலாம். ஈழத்து இலக்கியம் பற்றிப் பயில்வார்க்கும், பொது வாசகருக்கும் இந்நூல் பயன்படும்.

- அண்ணாவி

# புத்தகக் களஞ்சியம்
## *(நூல் மதிப்புரை)*

*புத்தகக் களஞ்சியத்தில் நூல் மதிப்புரைக்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.* **ஒரு வருடத்திற்குள் வெளிவந்த புத்தகங்கள் மட்டுமே மதிப்புரைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.** *ஒரு பிரதி மட்டுமே அனுப்பினால் அந்நூல் பற்றிய சிறுகுறிப்பு மாத்திரமே புதிய நூலகத்தில் இடம் பெறும்.*






## வாசகர் பேசுகிறார்

ஞானம் ஆசிரியருக்கு,
வணக்கம்.

ஞானம் நவம்பர் 66வது இதழில் வாசகர் பேசுகிறார் பகுதியில் கோணேசன் என்பவர் வெளிப்படுத்தியுள்ள அறியாமை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கார்த்திகேசு சிவத்தம்பி – இலக்கியமும் வாழ்க்கையும் நூல் வெளியீட்டுவிழா பற்றி அவரது கட்டுரையையும் நான் வாசித்துள்ளேன். அந்தக் கட்டுரையிலும் ஞானத்தில் வந்த கடிதத்திலும் கோணேசன் கவிஞர் ஏ. இக்பால் பற்றியே துதிபாடியிருக்கிறார். இதற்காக அவர் கலாநிதி துரை. மனோகரனைச் சாடவேண்டியதில்லை. அவரது கடிதத்தில் *''கேட்பார் சொற்கேட்டுத் தெரியாததைத் தயவுசெய்து எழுதாமலே இருப்பது நல்லது . 1962ம் ஆண்டு திரு சு. நடேசபிள்ளை தலைமையில் எழுத்தாளர் மாநாடு மட்டுமே நடைபெற்றது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அது சாகித்திய மண்டல விழா அல்ல''* என்று குறிப்பிட்டுள்ளார். இதை வாசித்தபொழுது கேட்பார் சொற்கேட்டு எழுதுவது கோணேசன்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது.அவருக்கு நாகரிகமாகவும் எழுதத்தெரியவில்லை. சொந்தப் பெயரிலும் எழுதுவதற்குத் துணிவில்லை.

சாகித்திய விழாவில் முட்டை எறிந்தது சம்பந்தமாக சுதந்திரன் 20.10.1963, பக். 6 இல் உள்ள ஒரு செய்தியைக் கீழே தருகிறேன்.

..... ''1963 ஒக்டோபர் 5, 6ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இலங்கைச் சாகித்திய மண்டல தமிழ் விழா நடைபெற்றது. கலாநிதி ஆ. சதாசிவம் இந்த விழாவிற்குத் தலைமை வகித்தார். இலக்கியத்தைப் பொறுத்தவரையில் வேறுபட்ட கொள்கை உடையோர் பலர் விழாவிற்குப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தனர். ஈழத்திலுள்ள தமிழ் அறிஞர்களுக்கும் எழுத்தாளர் மன்றங்களுக்கும் கலை மன்றங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. சாகித்திய மண்டல தமிழ் இலக்கிய விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் பரிசுபெற்றோரைப் பாராட்டும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அவ்வாண்டு சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்ற படைப்பாளிகளும் பல அறிஞர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர். 'பரிசு பெற்றோர் பாராட்டப்படுவர்' எனத் தலைவர் அறிவித்ததும் முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் பிரேம்ஜி சபையிலிருந்து ஏதோ பேசத்தொடங்கவே தலைவர் அவரை மேடைக்கு அழைத்தார். வித்துவான் வேலன் ஆட்சேபம் தெரிவித்தார். அவ்வேளை ஜனாப் முகம்மது சமீம் மேடையில் ஏறி சாகித்திய மண்டலம் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துவிட்டது என்றார். சபையில் இருந்த மார்க்ஸிய முற்போக்கு எழுத்தாளர்கள் கூச்சலிட்டனர். டொமினிக் ஜீவாவும் சுப்பிரமணியமும் கதிரைகளைத் தூக்கி வீசினர். கூழ் முட்டைகள் மேடையை நோக்கிப் பறந்தன. கலாநிதி சதாசிவம், சம்பந்தன், தேவன்–யாழ்ப்பாணம் உட்பட சகலரும் கூழ் முட்டையால் அர்ச்சிக்கப்பட்டனர். இளங்கீரன், நீர்வைப் பொன்னையன், ரகுநாதன், பெனடிக்ற் பாலன், பிரேம்ஜி, சில்லையூர் செல்வராசன், அகஸ்தியர், டானியல், யோகநாதன் முதலானோர் கூச்சலிடத்தொடங்கினர். நந்தி, சொக்கன், ஈழத்துச் சோமு முதலியோர் குழப்பம் விளைவித்து கூச்சல் போட்டவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துக்கொண்டிருந்தனர். கலாநிதி கா. சிவத்தம்பி இவற்றை அவதானித்துக் கொண்டு நின்றிருந்தார்.....''

மேலே தரப்பட்ட சுதந்திரன் செய்திக்கும் கோணேசனின் கூற்றுக்கும் எத்தனை வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்'

*–அ. சிவபாலச்சந்திரன், திருமலை*

****

அன்புடையீர்!

நீங்கள் மாதந்தோறும் அனுப்பி வைக்கும் ''ஞானம்'' தற்போது தவறாது கிடைத்து வருகின்றது. மிகுந்த நன்றி ''ஞானம்'' உண்மையிலேயே எழுத்தூழியம் புரிய வந்திருக்கும் எல்லோருக்கும் நீங்கள் வழங்கி வரும் 'அறிவுத்தானம்' என்னினுந் தப்பில்லை. ஞானத்தில் வெளிவரும் காத்திரமான படைப்புக்களினால் எதிர்கால இலக்கியவுலகத்தில் மென்மேலும் அஃதுயர் ஸ்தானத்தைப் பெறும் என்பதும் திண்ணமே!

ஒருநாள், நள்ளிரவு தாண்டி மூன்றுமணி வரையும் ஓடும் பஸ்வண்டிக்குள்ளே இருந்தவாறு உறக்கத்தை மறந்தவனாக நவம்பர் மாத ஞானத்தை உற்சாகத்துடன் படித்தேன். சிறுகதைகளுள் கே. ஆர். டேவிட் எழுதிய ''சில்லறைகள்'' என்னைச் சிலிர்க்க வைத்தது. படிப்பை உதறித் தள்ளிவிட்டுக் குடும்பப் பொறுப்புணர்ச்சி அற்று அலைகின்ற ஒரு தண்டச்சோறு பற்றிய தரமான சிறுகதை ''குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்'' என்னும் போக்குடைய குகன் போன்றோர்க்குப் போட்ட சவுக்கடி.

இவ்விதழிலும் 'கனதீ'ப் பிடித்துக் கருகாத கவிதைகளாய்க் கவிதைகள் இலக்கணத்தளையறுந்து கவிதை கிடப்பதால், நமதிளவல்கள் 'கலக்கினம்' கவிதைகளாய்ப் புதுக் கவிதைகளாய் ! ஆரோக்கியமான கவிதைச் சூழல் ! நிராரோக்கியமாய் மாறாது கவிதைச் சுகம் நீளட்டும். ஞானத்தில் நீங்கள் காணும் நேர்காணல் ஊடாக எஸ். பொன்னுத்துரை அவர்களின் புதிய பழைய வாழ்க்கையின் யதார்த்தங்கள் அனைத்தையும் யான் காண்கின்றேன். 1967 இல் காத்தான்குடி மத்திய மஹாவித்தியாலயத்தில் நான் கல்வி பயிலுங்காலத்தில் எஸ். பொ. எனதாசானாக இருந்தவர். சில மாதங்களே அவரிடங் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இருப்பினும் ஓர் இலக்கிய ஜாம்ப வானிடம் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்த பேறோ என்னவோ பிற்காலத்தில் பூவோடு சேர்ந்த நாருமானேன் நான்! ஆமாம் நான் கவிஞனானேன்!

உலகம், மலிந்துவிட்ட தேவைகளால் மாறிப் போனாலும் நாகரீக மோகத்தால் நாறிப் போனாலும் மனிதாபிமானம் செத்துப் போகவில்லை. உயிர் வாழ்கின்றது. சுயலாப மோகிகளுக்கிடையே ''மனிதர்களும்'' வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதை ஒரு பயணியின் பார்வையூடாக முன்வைத்தார் முருகபூபதி.

'ஞானம் 66' கொணர்ந்தளித்த ஆக்கங்களில் எதனையும் புறந்தள்ளவியலாது, அதே போன்று ஒவ்வொரு இதழும் இதுவரையும் கொணர்ந்த படைப்புக்களும் இனிக் கொண்டுவரப் போகுஞ் சிருஷ்டிகளும் இலக்கியவுலகில் அதன் சிரஞ்சீவியத்தன்மையை நிச்சயம் ருசுப்படுத்தும்! எழுத்தூழியக் காரர்களையும் எஞ்ஞான்றும் குஷிப்படுத்தும் என்பது பொச்சாப்பல்ல!

ஞானம் எல்லோர்க்குங் களந்தந்து இலக்கியம் வளர்க்குமாக!

*-கிண்ணியா ஏ. எம். எம். அலி*

****

ஞானம் ஆசிரியருக்கு......

நவம்பர் இதழ் கிடைத்தது ஒவ்வாரு இதழும் காத்திரமாக இருக்கிறது. இந்த இதழில் நான் ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்தது த. சிவசுப்பிரமணியம் எழுதிய முதன்இடத்தில்... கார்ல் மார்க்ஸ் என்ற கட்டுரை. இன்றைய தலைமுறையினர் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை. கார்ல் மார்க்ஸின் இறுதி சடங்கில் ஏங்கல்ஸ் ஆற்றிய உரையின் வார்த்தைகள் போல காலத்தை வென்றவர் கார்ல் மார்க்ஸ். கட்டுரையாளர் இதுபோன்ற கட்டுரைகள் தொடர்ந்து எழுத வேண்டும்.

*-அந்தனி ஜீவா*

****

செப்டம்பர் ஞானம் இதழில் வெளியான சதாசிவம் ஞாபகார்த்தப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்ற சிறுகதையில் கதாநாயகன் முகுந்தன் கவிதாவை இன்ரண்சிப்புக்காக, வந்த இடத்தில் திருகோணமலையில் சந்தித்தபோது அவரின் தாயும் கவிதாவின் தகப்பனும் ஒருவரையொருவர் காதலித்து அது நிறைவேறாமல் போனதால் முகுந்தன் கவிதாவைத் திருமணம் செய்யவேண்டும் என விரும்புவதாகவும், அதை அடிக்கடி சொல்லிச் சொல்லித் தனக்கு ஆசையை வளர்த்துவிட்டதாகவும் கூறுகிறார். அந்தச் சந்தர்ப்பத்திலும் சரி பிறகு ''நான் இப்படிச் சொன்னது பிழையா நீங்களும் வேறுயாரையும் விரும்பியிருக்கின்றீர்களா'' என்று கேட்ட போதும்

கவிதா முகுந்தனை விரும்புவதாக எதுவும் கூறவில்லை. மாறாக முகுந்தன் அப்படியொன்றுமில்லை பெரியவங்களால் பார்த்து முடிவு செய்தால் எனக்கு ஒருவித ஆட்சேபனையுமில்லை'' என்று மட்டும் கூறுகிறார்.

பின்னர் தந்தை காதல் திருமணத்தைவிட உறவுக்குள்ளே பேசிச் செய்யும் திருமணத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றிக் கூறிய போது எவ்வித மறுப்புமின்றிச் சம்மதித்து விடுகிறா. இப்படிப்பட்ட ஒரு நிலையில் முகுந்தன் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து காத்திருந்தது, கதைக்குப் பொருத்தமேயில்லை. ஒரு பொருத்தமற்ற கருத்தை மையமாக வைத்துப் புனையப்பட்ட சிறுகதைக்குப் போட்டியில் இரண்டாம் இடம் வழங்கியது எப்படியென்பது விளங்கவில்லை. மாதுமையின் உரை நடை சிறப்பானது அதனால் கவரப்பட்ட தேர்வாளர்கள் முக்கிய விடயத்தில் கோட்டை விட்டு விட்டார்கள்.

-பி. பி. அந்தோனிப்பிள்ளை
முருங்கன்

****

மதிப்பிற்குரிய 'ஞானம்' ஆசிரியர்
அவர்களுக்கு, வணக்கம்!

தமிழ்ப்படித்தவர்கள் கூட வாராவாரம், மாதா மாதம், வருடா வருடம் என்று எழுதும் வழக்கத்தைக் கொண்டிருப்பதை 'ஞானத்திலும் பார்க்க முடிகின்றது.'

இவ்விதம் எழுதுதல் பிழை என்றும் வாரம்தோறும் மாதம்தோறும் என்றே எழுதுதல் வேண்டும் என்பார் தமிழறிஞர் அ. கி. பரந்தாமனார் அவர்கள்.

இவைதவிர,

பாவித்தல் (பயன்படுத்துதல்) பதட்டம் (பதற்றம்) கோர்த்தல் (கோத்தல்) அருகாமை (அருகில்) கலாச்சாரம் (கலாசாரம்) நாகரீகம் (நாகரிகம்) என்று எழுதும் 'தமிழறிஞர்கள்' நம் மத்தியில் இருப்பதைக் காணும்போது இதயம் வலிக்கிறது.

தமிழ் வாழ்ந்தால்தான் நாம் வாழலாம் ..... இல்லையென்றால்.... இது பற்றி எத்தனை பேர் யோசிக்கின்றார்கள்?

அன்புடன்
வாகரைவாணன்

****

அன்புள்ள ஞானம் ஆசிரியருக்கு,

ஞானம் தொடர்ந்து தரமாக வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. பேட்டிகள் மிக நீண்டதாகப் போவது சில வேளைகளில் சலிப்பைத் தருகின்றது. முடிவடைந்த சிவத்தம்பியின் பேட்டி கூட பல நல்ல தகவல்களைத் தாங்கி வந்த போதும், அநாவசியமான சாதி விளக்கங்கள் சலிப்பையே ஏற்படுத்தின. எஸ். பொவின் பேட்டியிலும் சில விதண்டாவாதங்கள் அப்படியே!

பரிசுச் சிறுகதைகள் மூன்றையும் படித்தேன். முல்லை மணியின் முதலாவது பரிசுக்கதை 'கொக்கிளாய் மாமி' மண்பற்றை வலியுறுத்தும் நல்ல கதை நடையும் நன்றாக இருந்தது. இதற்கு சற்றும் குறையாதவாறு ச. முருகானந்தனின் ''விடியலை நோக்கி'' சிறுகதையும் அமைந்திருந்தது. தாய் மண்ணைப் பறி கொடுக்கும் மக்களின் மனம் போராடி மீளப் பெறவேண்டும் என எண்ணுவதை யதார்த்தமாக வெளிப்படுத்தினார். மாதுமையின் கதை படிக்க சுவையாக இருந்தாலும் வழமையான காதல் கதை தான்.

ஞானம் கவிதைகள் சில தரமாக வருகின்றன. கட்டுரைகளும் தான். வளர்க உங்கள் உயரிய பணி. அட்டைப் படம் புஸ்பாவுக்கும் ஒரு சபாஷ் போட வைக்கிறது.

-ச. வசந்தா

****

❑